# மகிழ்ச்சி

குழந்தைகளின் குதூகலம்

8



Maria

விடை தொகுப்பு

Maria

மரியா பப்ளிஷர்ஸ் (பி) லிட்.

முதல் பதிப்பு 2020

பதிவு அலுவலகம்
**138**, ஹைவேய்ஸ் காலனி, சுப்ரமணியபுரம், திருச்சிராப்பள்ளி **– 620 020.**

தலைமை அலுவலகம்
**30 & 31**, நட்சத்திரா, ஐ.ஏ.எஃப். சாலை, கிழக்கு தாம்பரம், சென்னை **– 600 059.**
தொலைபேசி **: 044 – 22392332**

மின்னஞ்சல்
info@mariapublishers.com

இணையதளம்
www.mariapublishers.com

வெளியிட்டோர்
மரியா பப்ளிஷர்ஸ் (பி) லிட்.,
**13**, சுந்தர்ராஜ் நகர், சுப்ரமணியபுரம்,
திருச்சிராப்பள்ளி **– 620 020.**
தொலைபேசி **: 0431 – 2331245**

அட்டை வடிவமைப்பு
முத்துக்குமார்

புத்தக வடிவமைப்பு
ஜென்சி

அச்சிட்டோர்
தி சபையர் ஆஃப்செட் பிரிண்டர்ஸ்

## 1. அமிழ்தத் தமிழ்மொழி

**பக்கம் 10**

**அ) பிரித்து எழுதுக.**

1. இணை + இலாத  2. வான் + அகம்  3. நான்கு + நிலம்
4. வழியில் + அன்றி

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. தமிழ்மொழி எத்தகையது?
   தமிழ்மொழி அமிழ்தம் போன்று இனிமையானது.
2. நால்வகை நிலங்கள் யாவை?
   குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை ஆகியன நால்வகை நிலங்கள் ஆகும்.
3. தமிழ்மொழி எவற்றையெல்லாம் போக்கவல்லது?
   தமிழ்மொழி பொய், செருக்கு, இழிவு என அனைத்தையும் போக்கவல்லது.
4. தமிழ்மொழி எதை சிந்திக்க வைப்பதாக இராமலிங்கனார் கூறுகிறார்?
   தமிழ்மொழியானது நல்வினையையும் அதன் பயன்களையும் இடைவிடாமல் சிந்திக்க வைப்பதாக இராமலிங்கனார் கூறுகிறார்.
5. இராமலிங்கனார் இயற்றிய நூல்களின் பெயர்களை எழுதுக.
   மலைக்கள்ளன், சங்கொலி, என்கலை, நாமக்கல் கவிஞர் பாடல்கள் ஆகியன இராமலிங்கனார் இயற்றிய நூல்கள் ஆகும்.

## 2. தண்டியலங்காரம்

**பக்கங்கள் 13-14**

**அ) பிரித்து எழுதுக.**

1. ஓங்கல் + இடை  2. ஏங்கு + ஒலி  3. வெம்மை + கதிர்
4. மின் + ஏர்  5. தன் + ஏர்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. தமிழ்மொழியின் பெருமைகளாக தண்டியலங்காரம் கூறும் செய்திகளை எழுதுக.
   ஓங்கி உயர்ந்த இரு மலைகளுக்கிடையே தோன்றி, ஒளி பரப்பி, ஒலி எழுப்பும் பெருங்கடலால் சூழப்பட்ட இப்பரந்த உலகின் இருளை அகற்றி, அறிவிற் சிறந்த சான்றோர்கள் வணங்கி தொழுமாறு விளங்குபவை இரண்டு. அவற்றுள் ஒன்று எவ்வித

கலப்படமும் இல்லாத பொன் போல மின்னும் தனித்துவம் கொண்ட செங்கதிரவன். மற்றொன்று பொதிகை மலையிலே பிறந்து தனக்கு நிகரில்லாததாய் விளங்கும் தமிழ்மொழி ஆகும்.

2. தண்டியலங்காரம் – நூல் குறிப்பு வரைக.

அணி இலக்கணத்தைப் பற்றி தெளிவாக எடுத்துரைக்கும் நூல் தண்டியலங்காரம் ஆகும். இந்நூலை இயற்றியவர் தண்டி ஆவார். இவர் கி.பி. 12 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். தண்டியலங்காரம் நூலில், பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்னும் மூன்று பிரிவுகள் உள்ளன. இந்நூல் காவியதர்சம் என்னும் வடமொழி இலக்கண நூலை தழுவி எழுதப்பட்ட நூலாகும். தண்டியலங்காரம் நூலிற்கு அணியதிகாரம், அணியியல் என்ற பெயர்களும் உண்டு.

## 3. கலை சிறப்பு

### பக்கங்கள் 18-19

**அ) பிரித்து எழுதுக.**

1. இரண்டு + ஆயிரம்
2. உலகில் + உள்ள
3. வாழ்வு + இயல்
4. பழுது + அடையாமல்
5. ஓவியம் + கலை

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கொண்டல்
2. அகம், புறம்
3. ஒழுக்கம்
4. கரிகால சோழன்
5. தஞ்சை பெரிய கோவில்

**இ) பொருத்துக.**

1. மலையும் மலை சார்ந்த இடம்
2. காடும் காடு சார்ந்த இடம்
3. வயலும் வயல் சார்ந்த இடம்
4. கடலும் கடல் சார்ந்த இடம்
5. மணலும் மணல் சார்ந்த இடம்

**ஈ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. கலை என்றால் என்ன?

கலை என்பது நுட்பமானத் தன்மை மற்றும் திறமைகளை உள்ளடக்கியதாகும். மனிதர்களின் காட்சிக்கும் கருத்திற்கும் இலக்காக மாறி, பொலிவும் அழகும் சிறப்புறப் பெற்று, உள்ளத்தை ஈர்க்கும் ஓர் ஒப்பற்ற அமைப்பாகும்.

2. ஐவகை நிலங்கள் யாவை?

- குறிஞ்சி
- முல்லை
- மருதம்
- நெய்தல்
- பாலை

3. தமிழ்மொழியின் வகைப்பாட்டை எழுதுக.

உலகிலுள்ள மற்ற மொழிகளைப் போல் இல்லாமல் தமிழ்மொழி மட்டும் இயல், இசை, நாடகம் என மூன்று தனித்துவமான வகைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. மற்ற மொழிகளுக்கான இலக்கணம் ஒன்றே ஆகும். ஆனால், தமிழ்மொழிக்கு மட்டும் அகம், புறம் என இரு வகையான வாழ்வியலிற்கும் சேர்த்து இலக்கணம் படைக்கப்பட்டுள்ளது.

4. கல்லணையின் புகழ் யாது?

உலகிலேயே தரையில் கட்டப்பட்டுள்ள மிகப்பெரிய அணை என்ற பெருமைக்கும் புகழுக்கும் உரியதாக விளங்குவது கல்லணை ஆகும்.

5. தஞ்சை பெருவுடையார் கோவிலின் கோபுரம் பற்றி எழுதுக.

தஞ்சை பெருவுடையார் கோவில் கோபுரத்தின் உயரம் சுமார் 216 அடி. அதன் உச்சியில் வைக்கப்பெற்ற கல் $25\frac{1}{2}$ சதுர அடியும், 80 டன் எடையும் கொண்ட ஒரே கல் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் நான்கு புறங்களிலும் வைக்கப்பட்டுள்ள நந்திகளின் எண்ணிக்கை எட்டு ஆகும். அவை ஒவ்வொன்றும் $5\frac{1}{2}$ அடி உயரமும், $6\frac{1}{2}$ அடி நீளமும் கொண்டவையாகும்.

## உ) பெருவினாக்களுக்கு விடையளி.

1. தமிழ் மக்கள் காற்றை எவ்வாறு வகைப்படுத்தினர் என்பதை எழுதுக.

கிழக்கிலிருந்து வரும் கொண்டல் காற்றானது மேகத்தின் மூலம் கடல் நீரை அள்ளி மழையாகப் பொழிந்து முல்லை நிலத்தை வாழ்விக்கும் எனவும், மேற்கிலிருந்து வரும் கோடை காற்றானது ஆற்றின் நீரை மூலமாகப் பெற்று மருத நிலத்தை வாழ்விக்கும் எனவும், வடக்கிலிருந்து வரும் வாடை காற்றானது பயிர்களை வளர்க்கும் எனவும், தெற்கிலிருந்து வரும் தென்றல் காற்றானது மக்களை வளர்க்கும் என தமிழகத்தின் நான்கு திசைகளிலிருந்தும் வருகின்ற காற்றை ஆராய்ந்தறிந்து நமது பண்டைய தமிழ் மக்கள் வகைப்படுத்தியுள்ளார்கள்.

2. கல்லணை – சிறு குறிப்பு வரைக.

திருச்சிக்கு கிழக்கே பன்னிரண்டு மைல் தொலைவில் கரிகால சோழனால் கட்டப்பட்ட கல்லணையை தமிழக கட்டிடக்கலைக்கு சான்றாக கூறலாம். உலகிலேயே தரையில் கட்டப்பட்டுள்ள மிகப்பெரிய அணை என்ற பெருமைக்கும் புகழுக்கும் உரியதாக விளங்குவது கல்லணை ஆகும். அணையின் இரு புறங்களிலும் ஐந்தடிக்கு மேற்படாத கரையை அமைத்து, தண்ணீரைத் தேக்கி, அத்தண்ணீரை ஆறு பகுதிகளுக்குப் பிரித்து அனுப்புகின்ற

தொழில்நுட்பம் இன்றளவும் சோழர் கால தமிழர்களின் கட்டிடக்கலையின் புகழை பறைசாற்றுகிறது. மற்ற அணைகள் எல்லாம் இருபுறங்களிலும் மலைகளைப் போன்ற கரைகளைக் கொண்டதாகவும், பெரும் பள்ளத்தாக்குகளில் நீரைத் தேக்குவதாகவும் அமைந்துள்ள நிலையில் கல்லணை மட்டும் தரையிலேயே நீரை தேக்கி வைக்கும் அணையாக உள்ளது. கரிகால சோழன் சுமார் 1800 ஆண்டுகளுக்கு முன்னரே கல்லணையை கட்டியுள்ளார் என்பது வரலாற்று அறிஞர்களின் கூற்றாகும். இன்றைய உலகைப் போல் சிமெண்ட், இரும்பு கம்பிகள் போன்ற கட்டுமான பொருட்கள் எதுவும் இல்லாமல் வெறும் செங்கலையும் சுண்ணாம்பையும் வைத்து கட்டிய மிகப்பெரிய அணை கல்லணை என்பது குறிப்பிடத்தக்கது. சுமார் 2000 ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக இருந்தாலும் இன்றும் கம்பீரமாக நிற்கும் கல்லணையானது பண்டைய சோழர் கால தமிழர்களின் கட்டிடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

3. தஞ்சை பெருவுடையார் கோவிலின் சிறப்புகள் பற்றி எழுதுக.

கி.பி. 1003 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு கி.பி. 1009 ஆம் ஆண்டிற்குள் இராசராச சோழ மன்னனால் கட்டி முடிக்கப்பட்ட தஞ்சை பெருவுடையார் கோவில் தமிழ் மக்களின் கட்டிடக்கலைக்கு மற்றொரு சிறந்த சான்றாக விளங்குகிறது. இக்கோவிலிலுள்ள கோபுரத்தின் உயரம் சுமார் 216 அடி. அதன் உச்சியில் வைக்கப்பெற்ற கல் $25\frac{1}{2}$ சதுர அடியும், 80 டன் எடையும் கொண்ட ஒரே கல் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் நான்கு புறங்களிலும் வைக்கப்பட்டுள்ள நந்திகளின் எண்ணிக்கை எட்டு ஆகும். அவை ஒவ்வொன்றும் $5\frac{1}{2}$ அடி உயரமும், $6\frac{1}{2}$ அடி நீளமும் கொண்டவையாகும். கோவில் கட்ட சாரம் கட்டத் தொடங்கிய இடத்திற்குச் சாரப்பள்ளம் என்ற பெயர் இன்றும் இருந்து வருகிறது. இரும்பும் சிமெண்டும் இல்லாத ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பெற்ற இக்கோபுரம் இன்னும் பழுதடையாமல் இருந்து வருவது தமிழ் மக்களுடைய கட்டிடக் கலையின் உயர்வை காட்டுகிறது.

4. தமிழர்களின் ஓவியக்கலை பற்றி விளக்குக.

தமிழ் மக்களின் ஓவியக்கலையானது உலக அளவில் புகழ்பெற்ற ஒன்றாகும். காவியத்தில் ஓவியத்தையும், ஓவியத்தில் காவியத்தையும் காண்பதே தமிழ் மக்களின் காவியக்கலையும் ஓவியக்கலையுமாகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழ் மக்கள் ஓவியக்கலையில் சிறந்து விளங்கியிருக்கின்றனர். ஒவ்வொரு காலத்து ஓவியங்களும், ஒவ்வொரு சிறப்பை கொண்டுள்ளன. இன்று நம் முன்னே பல்லவர் காலத்து ஓவியங்களும், சோழர் காலத்து ஓவியங்களும்

காணக்கிடைக்கின்றன. இவற்றுள் சிலவற்றைத் திருச்சிக்கு தெற்கே புதுக்கோட்டையை அடுத்து 10 மைல் தொலைவிலுள்ள சித்தன்னவாசலிலும், தஞ்சை பெருவுடையார் கோவிலிலும் காணலாம். இந்த ஓவியங்கள் அனைத்தும் வரையப்பட்டு சுமார் 1300 ஆண்டுகளுக்கு மேலாகியும் அவற்றின் வண்ணங்கள் இன்று வரை அழியாமல் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஓவியத்தில் காணப்படும் நடனமங்கை, அரச அரசியரின் உருவங்கள், அல்லித் தாமரை பூத்த குளத்தின் உருவங்கள் என அனைத்தும் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்வனவாக அமைந்திருக்கின்றன.

## 4. தமிழ் எழுத்துகளின் பிறப்பு

**பக்கம் 22**

**அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. ஆ) இரண்டு
2. ஈ) கழுத்து
3. இ) உ, ஊ
4. ஆ) ப், ம்
5. அ) வ்

**ஆ) பொருத்துக.**

1. வாய்த் திறப்பு
2. மேல்வாய்ப் பல், நாவின் விளிம்பு
3. அண்ணத்தின் அடி, நாவின் முதல்
4. மேல்வாய்ப் பல் அடி, நாவின் நுனி
5. மேல் வாய், நாவின் நுனி

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. எழுத்துகளின் பிறப்பு என்றால் என்ன?

   உயிர் தங்கியுள்ள உடம்பின் உள்ளே எழுகின்ற காற்றானது தலை, மூக்கு, கழுத்து, மார்பு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றுடன் பொருந்தி உதடு, நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியால் வெவ்வேறு ஒலிகளாகப் பிறக்கின்றன. இதுவே எழுத்துகளின் பிறப்பு என அழைக்கப்படுகிறது.

2. எழுத்துகளின் பிறப்பு எத்தனை வகைப்படும்? அவற்றை விளக்குக.

   எழுத்துகள் பிறக்கும் இடத்தின் அடிப்படையில் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகிறது. அவை இடப்பிறப்பு மற்றும் முயற்சிப் பிறப்பு என்பனவாகும்.

   **இடப்பிறப்பு:** எழுத்துகள் பிறக்கின்ற தலை, மூக்கு, கழுத்து, மார்பு முதலியவற்றை இடப்பிறப்பு என்று வழங்குவர்.

**முயற்சிப் பிறப்பு:** உதடு, நாக்கு, பல், மேல்வாய் முதலிய உறுப்புகளின் தொழில் வேறுபாட்டால் ஒலிப்பதனை முயற்சிப் பிறப்பு என்று வழங்குவர்.

3. வல்லின, மெல்லின, இடையின எழுத்துகளின் இடப்பிறப்பை எழுதுக.
   - வல்லின எழுத்துகள் ஆறும் மார்பை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
   - மெல்லின எழுத்துகள் ஆறும் மூக்கை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.
   - இடையின எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

4. உயிர் எழுத்துகளின் முயற்சிப் பிறப்பை விவரி.
   - அ, ஆ ஆகிய இரண்டு உயிர் எழுத்துகளும் வாயைத் திறந்து ஒலிப்பதால் பிறக்கின்றன.
   - இ, ஈ, எ, ஏ, ஐ ஆகிய ஐந்து எழுத்துகளும் வாயைத் திறப்பதுடன் மேல்வாய்ப் பல்லை நாவின் விளிம்பு தொடுவதால் பிறக்கின்றன.
   - உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்து எழுத்துகளும் வாயைத் திறக்கும் முயற்சியுடன் உதடுகளைக் குவிப்பதால் பிறக்கின்றன.

5. ழகர, லகர, ளகர மெய்களின் முயற்சிப் பிறப்பு பற்றி எழுதுக.
   - "ழ்" என்ற மெய்யானது மேல்வாயை நாவின் நுனி தடவுவதால் பிறக்கிறது.
   - "ல்" என்ற மெய்யானது மேல்வாய்ப் பல்லின் அடியை நாவின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
   - "ள்" என்ற மெய்யானது மேல்வாயை நாவின் ஓரங்கள் தடித்து தடவுவதால் பிறக்கிறது.

## 5. உழைப்பே உயர்வு தரும்!

**பக்கம் 24**

### அ) பிரித்து எழுதுக.

1. தன்னிடம் + இருந்த 2. இரண்டு + அடி 3. பொறுப்பு + இன்றி
4. நெல் + பயிர் 5. அறு + வடை

### ஆ) வினாக்களுக்கு விடையளி.

1. "உழைப்பே உயர்வு தரும்" கதையில் வரும் விவசாயியின் கவலை யாது?

   தனது பிள்ளைகள் மூவரும் பொறுப்பில்லாமல் இருப்பதைக் கண்ட விவசாயி கவலை கொண்டார்.

2. விவசாயி தன் மகன்களிடம் என்ன கூறினார்?

விவசாயி தனது மகன்களுக்கு பிரித்து கொடுத்த நிலங்களில் ஓரிடத்தில் ஓரடி ஆழத்தில் ஒரு புதையலை புதைத்து வைத்திருப்பதாகவும், தான் இறந்த பிறகு அப்புதையலை தேடி எடுத்துக் கொள்ளுமாறும் கூறினார்.

3. புதையல் கிடைக்காததால், மூன்று மகன்களும் என்ன செய்தனர்?

மூவரும் தோண்டிய நிலங்களை வீணாக்க வேண்டாம் என எண்ணி அதை சமன்செய்தனர். பின்னர் அந்த நிலங்களில் தண்ணீர் பாய்ச்சி, இயற்கை உரமிட்டு நெற்பயிர்களை நட்டனர்.

4. “உழைப்பே உயர்வு தரும்” கதையின் நீதியை எழுதுக.

கடின உழைப்பு ஒன்றே ஒருவரின் வாழ்விற்கு உயர்வை அளிக்கும். ஒருவர் நிர்ணயித்த இலக்கை நோக்கி இடைவிடாமல் உழைத்தால், அந்த உழைப்பே அவருக்கு வெற்றியை தேடித்தரும். கடின உழைப்பே வாழ்வை சிறப்புற மாற்றியமைக்கும் தன்மை கொண்டது.

## 6. திருவள்ளுவமாலை

**பக்கம் 28**

**அ) பிரித்து எழுதுக.**

1. தினை + அளவு
2. சிறு + புல்
3. பனை + அளவு
4. மனை + அளகு

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. திருவள்ளுவமாலை பாடலின் பொருளை எழுதுக.

நெல் குத்தும்போது பெண்கள் பாடும் உலக்கை பாட்டை கேட்டுக்கொண்டு வள்ளைக் கொடியில் வீட்டுக்கோழி உறங்கிக் கொண்டிருக்கும் அளவிற்கு நீர்வளம் மிக்க நாட்டை ஆளும் அரசனே! பசும்புல்லின் நுனியில் தேங்கியுள்ள தினை அளவு நீர்த்துளியானது, அதன் அருகிலுள்ள மிக உயரமான பனைமரத்தை உள்ளடக்கி சிறியதாக காட்டும். அதைப் போலவே வள்ளுவரால் இயற்றப்பட்ட இரண்டு அடிகளைக் கொண்ட மிகச் சிறிய திருக்குறளானது தன்னுள் மிகப்பெரிய பொருளை உள்ளடக்கிக் காட்டுகிறது என்பதை உணர்ந்து கொள்வாயாக என்பதே திருவள்ளுவமாலை பாடலின் பொருளாகும்.

2. திருவள்ளுவமாலை – நூல் குறிப்பு வரைக.

திருக்குறளின் பெருமைகளையும், திருவள்ளுவரின் பெருமைகளையும் புகழ்ந்து எழுதப்பட்ட பாடல்களின் தொகுப்பே

திருவள்ளுவமாலை என்னும் நூலாகும். தமிழ்மொழியில் வேறு எந்தவொரு நூலுக்கோ அல்லது நூலாசிரியருக்கோ இப்படி எல்லாப் புலவர்களும் வரிசையாக புகழ்ந்து புகழாரம் சூட்டியதில்லை. இது திருக்குறளுக்கும், திருவள்ளுவருக்கும் மட்டுமே கிடைத்த தனிப்பெரும் சிறப்பாகும். திருவள்ளுவமாலை நூலில் மொத்தம் ஐம்பத்தைந்து பாடல்கள் உள்ளன. இந்தப் பாடல்கள் ஐம்பத்தைந்து புலவர்களால் பாடப்பட்டதாகும். இப்புலவர்களுள் இடைக்காடர், ஔவையார் ஆகிய இருவரும் குறட்பாவிலும், ஏனைய ஐம்பத்து மூவரும் வெண்பாக்களாலும், வள்ளுவரையும் திருக்குறளையும் புகழ்ந்து பாடியுள்ளனர். இந்நூலில் உள்ள பாடல்களின் தலைப்பாக அப்பாடலைப் பாடிய புலவர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தொகுப்பு நூல் கி. பி. 11 ஆம் நூற்றாண்டு உருவாக்கப்பட்டதாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

## 7. திருக்குறள்

**பக்கம் 31**

**அ) பிரித்து எழுதுக.**

1. செவி + செல்வம் 2. அவி + உணவின் 3. கேள்வி + உடையார்
4. இழுக்கல் + உடை 5. பிழைத்து + உணர்

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. சிறந்த செல்வம் 2. கல்லாதவன் 3. ஊன்றுகோல்
4. நல்லவற்றைக் 5. செவிட்டுத் தன்மை

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. செல்வங்களுள் தலையான செல்வம் எது?
செவியால் கேட்டுப் பெறும் செல்வமே சிறந்த செல்வம் ஆகும். அச்செல்வமே செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையானதாகும்.

2. ‘‘செவிக்குண வில்லாத போழ்து’’ – குறள் விளக்கம் தருக.
செவிக்கு கேள்வியாகிய உணவு இல்லாத போது, வயிற்றுக்கும் சிறிது உணவு இடப்படும்.

3. ஊன்றுகோல் போல உதவுவது எது?
ஒழுக்கமுடைய சான்றோரின் வாய்ச் சொற்கள், வழுக்கல் உடைய சேற்று நிலத்தில் ஊன்றுகோல் உதவுவது போல துன்ப நேரத்தில் உதவும்.

4. நல்லவற்றை ஏன் கேட்டறிய வேண்டும்?
   எவ்வளவு சிறியதே ஆயினும் நல்லவற்றைக் கேட்டறிய வேண்டும். கேட்ட அந்த அளவிற்கு அவை நிறைந்த பெருமையைத் தரும்.

5. கேளாத செவிட்டுத் தன்மை உடையவை எவை?
   கேள்வியறிவால் துளைக்கப்படாத செவிகள், இயற்கையான துளைகள் கொண்டு ஓசையைக் கேட்டறிந்தாலும் கேளாத செவிட்டுத் தன்மை உடையவை ஆகும்.

## 8. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

**பக்கம் 34**

**அ) பிரித்து எழுதுக.**

1. தமிழ் + ஆசிரியர்
2. மடத்தில் + உள்ள
3. மனம் + பாடம்
4. சரண் + அடைந்தன

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. சிறு வயதில் கவிமணி செய்த செயல் யாது?
   கவிமணி பள்ளி மாணவனாக இருந்தபோது, ஒரு நாள் அவரின் மனதில் ஒரு பாட்டு தோன்றியது. உடனே அதை ஒரு காகிதத்தில் எழுதிப் படித்துப் பார்த்தார். மறுநாள் மிகவும் சீக்கிரமாக பள்ளிக்கு வந்த அவர் தான் இயற்றிய பாடலை ஒரு தாளில் எழுதி, ஆசிரியர் உட்காரும் நாற்காலிக்கு முன் இருந்த மேசையின் மீது அந்த காகிதத்தை வைத்து விட்டுத் தனது இடத்தில் வந்து அமர்ந்து கொண்டார்.

2. கவிமணி இயற்றிய பாடலைப் படித்த தமிழாசிரியர் என்ன செய்தார்?
   தமிழாசிரியர் கவிமணி இயற்றிய பாடலைப் படித்துப் பார்த்தார். பின்னர் அந்தப் பாடல் மிகவும் அழகாக உள்ளது எனவும், அந்தப் பாடலை இயற்றிய கவிஞரின் பெயர் ஏதும் குறிப்பிடவில்லை எனவும் சொல்லிக்கொண்டே மீண்டும் மீண்டும் அந்தப் பாடலை பாடி மகிழ்ந்தார். மாணவர்களுக்கும் கவிமணியின் பாடலை பாடிக் காட்டி, அதன் சொல் அழகையும் பொருள் அழகையும் எடுத்துக் கூறினார்.

3. கவிமணி மடத்தில் தமிழ் பயின்று கொண்டிருந்த போது நிகழ்ந்த சுவையான நிகழ்வை எழுதுக.
   ஒருமுறை கவிமணியையும் மற்றவர்களையும் தம்பிரான் அழைத்தார். “இப்போது நான் இந்த அப்பம், வடை முதலியவற்றை உங்களுக்குத் தரப் போகிறேன். ஆனால், ஒரு நிபந்தனை! இதோ என் கையில் தேவாரத்திரட்டு இருக்கிறது. இதிலிருந்து முதலில் நான் ஒரு

பாடலைப் பாடுவேன். பிறகு உங்களிடம் புத்தகத்தைத் தருவேன். நீங்கள் புத்தகத்தைப் பார்த்து அதே பாடலை ஒருமுறை படியுங்கள். பிறகு நான் புத்தகத்தை திரும்ப வாங்கி மற்றொரு முறை அதே பாட்டைப் பாடுவேன். பிறகு நீங்கள் அந்தப் பாடலைத் தவறு இல்லாமல் மனப்பாடமாக ஒப்புவிக்க வேண்டும். சரியாகச் சொல்லுகிறவர்களுக்கு பாட்டு ஒன்றுக்கு ஓர் அப்பம் அல்லது ஒரு வடை வீதம் தருவேன்!'' என்றார். போட்டி ஆரம்பமாயிற்று. அப்பமும், வடையும் ஒவ்வொன்றாகக் கவிமணி அவர்களிடம் சரணடைந்தன. ஆனால், கவிமணி போட்டியில் பரிசாகக் கிடைத்த வடைகளையும், அப்பங்களையும் எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்துத் தாமும் அவர்களுடன் சேர்ந்து உண்டு மகிழ்ந்தார்.

4. கிளியைப் பற்றி கவிமணி கேட்ட கேள்வி என்ன?
கவிமணி ஓர் ஆரம்பப் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போது பாடப் புத்தகத்தில் கிளியைப் பற்றிய பாடம் இருந்தது. அதில் கிளியின் படமும் வரையப்பட்டிருந்தது. அந்தக் கிளியின் படத்தைப் பார்த்த பின்னர், ''கிளிக்கு ஒரு காலில் எத்தனை விரல்கள் உள்ளன?'' என்ற கேள்வியை மாணவர்களிடம் கேட்டார்.

## 9. நான்கு வகை குறுக்கங்கள்

**பக்கங்கள் 37-38**

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. இ) சார்பெழுத்துகள் 2. ஆ) பத்து 3. ஈ) இரண்டு
4. ஆ) ஔகாரம் 5. அ) மகரக்குறுக்கம்

### ஆ) பொருத்துக.

1. மலை 2. ஔவை 3. தரும் வளவன் 4. கஃஃடீது

### இ) வினாக்களுக்கு விடையளி.

1. சார்பெழுத்துகள் என்றால் என்ன?
முதலெழுத்துகளை சார்ந்து வரும் எழுத்துகள் சார்பெழுத்துகள் எனப்படும். இவை முதலெழுத்துகளின் திரிபு, விகாரத்தால் பிறப்பதாலும் சார்பெழுத்துகள் என்று அழைக்கப்படுகின்றன.

2. ஐகாரக்குறுக்கம் என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.
ஐகாரம் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரையாகவும், ஒரு மாத்திரையாகவும் ஒலிப்பதே ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

எ.கா. ஐம்பது

“ஐம்பது” என்ற சொல்லில் ஐகாரமானது சொல்லுக்கு முதலில் வந்து ஒன்றரை மாத்திரை அளவாக குறைந்து ஒலிக்கிறது.

3. ஔகாரக்குறுக்கத்தை விவரி.

ஔகாரம் தன்னைச் சுட்டிக் கூறும்போது மட்டுமே இரண்டு மாத்திரை அளவாக ஒலிக்கும். ஒரு சொல்லின் முதலாவதாக வரும்போது ஒன்றரை மாத்திரை அளவாக குறைந்து ஒலிக்கும். இதுவே ஔகாரக்குறுக்கம் எனப்படும். ஔகாரம் ஒரு சொல்லின் முதலெழுத்தாக மட்டுமே வரும். சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் ஔகாரம் வராது.

எ.கா. ஔவை

மேற்கண்ட எடுத்துக்காட்டில் சொல்லுக்கு முதலில் வந்துள்ள ஔகாரமானது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து ஒன்றரை மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கிறது.

4. மகரக்குறுக்கம் என்பது யாது? அதன் வகைகள் யாவை?

மகர ஒற்றாகிய ‘ம்’ என்னும் எழுத்து தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து கால் மாத்திரையாக குறைந்து ஒலிப்பது மகரக்குறுக்கம் எனப்படும். மகரக்குறுக்கம் இரண்டு வகைப்படும். அவை,

- தனிமொழி
- புணர்மொழி

5. ஆய்தக்குறுக்கத்தை விளக்குக.

இரண்டு சொற்கள் சேரும்போது நிலைமொழியில் தனிக்குறிலை அடுத்து வரும் லகர மற்றும் ளகர மெய்யானது வருமொழியின் தகர வரிசை சொற்களுடன் சேரும்போது ஆய்த எழுத்தாக மாறுவதே ஆய்தக்குறுக்கம் எனப்படும். அவ்வாறு மாறிய ஆய்த எழுத்தானது தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து கால் மாத்திரையாகக் குறைந்து ஒலிக்கும்.

எ.கா. அல் + திணை = அஃறிணை

## 10. புதுமனை புகுவிழா

**பக்கம் 42**

**அ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. செயற்கை
2. பழைய
3. தீமை
4. துன்பம்
5. கெட்டவர்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. கிருஷ்ணதேவராயர் தெனாலியிடம் என்ன கூறினார்?
   வீட்டைக் கட்டி முடித்த பின்னர் ஒரு நல்ல மனிதனுக்கு அதை தானமாகக் கொடுத்து விடுமாறு கிருஷ்ணதேவராயர் தெனாலியிடம் கூறினார்.

2. கிருஷ்ணதேவராயர் தோட்டத்தில் இருந்தவை யாவை?
   கிருஷ்ணதேவராயரின் தோட்டத்தில் வண்ண வண்ண மலர்களும், பசுமையான புல்வெளிகளும் இருந்தன.

3. தெனாலி நல்ல மனிதரைக் கண்டறியாததற்கு காரணமாகக் கூறியது என்ன?
   தெனாலி யாரையாவது அழைத்து அந்த வீட்டை வைத்துக் கொள்ளுமாறு கூறினால் உடனே அவர்களும் அதை ஏற்றுக்கொள்வதாக கூறினான். அதுபோன்று மற்றவர்களின் உடமைகளுக்கு ஆசைப்படுபவர்களை மட்டுமே அதுவரை பார்த்ததாக கூறினான். மேலும் மன்னரின் அன்புக் கட்டளையை மனதில் கொண்டு, மற்றவர்களின் உடமைகளுக்கு ஆசைப்படாத நல்ல மனிதனை தேடிக்கொண்டிருப்பதாகவும் கூறினான்.

## 11. நீதிநெறி விளக்கம்

**பக்கங்கள் 47-48**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கணவன்
2. ஆசிரியர்
3. நட்பினர், பகைவர், அயலவர்
4. காலத்தை
5. தூத்துக்குடி

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. யாருக்கு யார் தெய்வமாவர் என நீதிநெறி விளக்கம் கூறுகிறது?
   நல்லொழுக்கமுடைய பெண்ணுக்கு அவளின் கணவனே தெய்வமாவான். புதல்வர்களுக்கு அவர்களின் தந்தையும் தாயுமே தெய்வமாவார்கள். அறவோர்க்கு அடிகளே தெய்வம். மாணவர்களுக்கு அவர்களின் ஆசிரியர்களே தெய்வமாவார்கள். அதுபோல நாட்டின் குடிமக்களுக்கு இலை நுனி போன்ற பசும்பொன் நகைகளணிந்த அரசனே தெய்வமாவான்.

2. முறையாவது யாது? முறை அல்லாதது யாது?
   அரசனானவன் குடிமக்களின் நலங்களை அவர்களிருக்குமிடத்தில் வேவுகாரர்களை அனுப்பித் தெரிந்து கொள்வதுமன்றி, அவர்களாலும் தெரிந்து கொள்ளப்படாத உண்மைகளைத் தன் தோளே துணையாகக் கொண்டு, நேரில் சென்று அறிவதும்,

நட்பினர், பகைவர், அயலவர் ஆகிய மூவகையாரிடத்தும் வேற்றுமையின்றிக் கலந்து அவ்வவரின் உண்மை செய்தியை அறிவதும், நல்ல அரசாட்சி முறையாம். குடிமக்கள் தாமாக தன்னிடம் வந்து முறையிட்டுக் குறையுரைக்கும்போது கூட அதனைக் கேளாமலிருப்பதும் முறையன்றாம்.

3. ஒரு செயலை எப்படிச் செய்ய வேண்டும்?

கருதிய தொழிலை முடிக்கக் காலத்தினை அறிந்து, அக்காரியத்தைச் செய்து முடித்தற்கேற்ற இடத்தினையும் அறிந்து, செய்யும் அக்காரியத்தின் காரணத்தையும் அறிந்து, அதைச் செய்து முடித்தபின் அதனாலேற்படும் பயனையும் அறிந்து, அக்காரியம் செய்ய துணை செய்ய இருப்போரின் வலிமைகளையும் தெரிந்து கொண்ட பின்னரே அச்செயலைச் செய்யவேண்டும்.

4. குமரகுருபரர் – குறிப்பு வரைக.

குமரகுருபரர் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள திருவைகுண்டம் என்னும் ஊரில் சண்முக சிகாமணிக் கவிராயருக்கும், சிவகாம சுந்தரிக்கும் மகனாகப் பிறந்தார். ஐந்து வயது வரை பேசும் திறன் அற்று இருந்தார். இவரின் பெற்றோர் திருச்செந்தூர் கோவிலுக்கு சென்று வழிபட பேசும் திறன் வாய்க்கப் பெற்றார். அந்த சிறிய வயதிலேயே கந்தர் கலிவெண்பா என்னும் பாடலை திருச்செந்தூர் முருகக் கடவுளைப் போற்றி பாடியுள்ளார். சில வருடங்களுக்குப் பின்னர் தருமபுரம் ஆதீனத்தில், மாசிலாமணி தேசிகர் என்பவரிடம் சீடராக சேர்ந்து சைவ சித்தாந்தம் பயின்றார். கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், கயிலைக் கலம்பகம் முதலிய நூல்களை இயற்றியுள்ளார்.

## 12. திருக்குறள்

**பக்கம் 51**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தீமை    2. கோபம்    3. துன்பம்

4. நன்மை    5. கொள்கை

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. "கறுத்தின்னா செய்தவக் கண்ணும்" – குறள் விளக்கம் தருக.

ஒருவன் கோபம் கொண்டு துன்பம் செய்த போதிலும், அவனுக்குத் திரும்ப துன்பம் செய்யாதிருத்தலே குற்றமற்றவரின் கொள்கையாகும்.

2. தப்ப முடியாத அளவு துன்பத்தை தருவது எது?
நாம் ஒரு தீமையும் செய்யாதிருக்க, கோபம் கொண்டு நமக்குத் தீமை செய்தவர்க்கு நாம் தீமை செய்தால், தப்ப முடியாத அளவு துன்பத்தையே அது கொடுக்கும்.

3. தீமை செய்தவரை தண்டிக்கும் வழி யாது?
நமக்குத் தீமை செய்தவரைத் தண்டிக்கும் வழி, அவர் வெட்கப்படும்படி அவருக்கு நன்மையைச் செய்து, அவர் செய்த தீமையையும், நாம் செய்த நன்மையையும் மறந்துவிடுவதேயாகும்.

4. ஒருவன் மற்றவருக்கு எதை செய்யக் கூடாது?
ஒருவன் துன்பமானவை என்று தன் வாழ்க்கையில் அனுபவித்து உணர்ந்தவைகளை மற்றவர்க்குச் செய்யாமலிருக்க வேண்டும்.

5. "பிறர்க்கின்னா முற்பகல் செய்யின்" எனத் தொடங்கும் குறளின் பொருளை எழுதுக.
முற்பகலில் மற்றவருக்குத் துன்பமானவற்றைச் செய்தால், அத்துன்பம் பிற்பகலில் செய்தவர்க்கே தாமாக வந்து சேரும்.

## 13. மூவேந்தர் காப்பியம்

**பக்கங்கள் 55-56**

**அ) பிரித்து எழுதுக.**

1. மூன்று + பிரிவினர்
2. காத்து + அருள்க
3. பூ + சோலை
4. மூன்று + வேந்தர்

**ஆ) சேர்த்து எழுதுக.**

1. கடலாடுதல்
2. சிலப்பதிகாரம்
3. பொற்கொல்லர்
4. வானுலகு

**இ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. சிலப்பதிகாரம் எவ்வெவற்றை வாழ்த்துகிறது?
சந்திரன், சூரியன், மழை, பூம்புகார் ஆகிய நான்கினையும் சிலப்பதிகாரம் வாழ்த்துகிறது.

2. கண்ணகியின் தந்தை பெயர் யாது?
கண்ணகியின் தந்தை பெயர் மாநாய்கன்.

3. கண்ணகியின் கேள்விக்கு சூரியனின் பதில் யாது?
கண்ணகி சூரியனிடம் தனது கணவன் கள்வனா என்று வினவினாள். அதற்கு சூரியன் அவளுடைய கணவனான

கோவலன் கள்வன் அல்ல எனவும், அவனைக் கள்வன் என்ற அந்த ஊரைத் தீ உண்ணும் எனவும் பதில் கூறினான்.

4. கோவலன் விற்க எடுத்துச் சென்ற பொருள் யாது?
   கோவலன் விற்க எடுத்துச் சென்ற பொருள் கண்ணகியின் காற்சிலம்பு.

5. கண்ணகியின் வரலாற்றை சேரன் செங்குட்டுவனுக்கு எடுத்துரைத்தவர் யார்?
   கண்ணகியின் வரலாற்றை சேரன் செங்குட்டுவனுக்கு எடுத்துரைத்தவர் மதுரை தமிழாசிரியர் சீத்தலைச் சாத்தனார்.

**ஈ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. பொற்கொல்லன் செய்த சூழ்ச்சி யாது? விளக்குக.
   பொற்கொல்லன் அரசியின் சிலம்பு ஒன்றைத் திருடியவன். கோவலன் கொடுத்த சிலம்பும், அரசியின் சிலம்பும் ஒத்திருந்ததைக் கண்ட அவன் கோவலனை திருடன் என்று காட்டி தான் தப்பித்துக் கொள்ளலாம் என்று சூழ்ச்சி செய்தான்.

2. கண்ணகியும் பாண்டிய மன்னனும் சந்தித்தபோது நிகழ்ந்ததை விவரிக்க.
   கண்ணகி பாண்டிய மன்னனை சந்தித்த போது தான் கோவலனின் மனைவி என்றும், கோவலன் கள்வன் அல்லன் என்றும், தன் சிலம்பினுள் இருக்கும் பரல் மாணிக்கம் என்றும் கூறினாள். அரசன் தன் மனைவியின் சிலம்பினுள் இருக்கும் பரல் முத்து என்றான். கோவலனிடமிருந்து கவர்ந்த சிலம்பை கண்ணகி உடைத்தபோது, அதிலிருந்த மாணிக்கப் பரல்கள் தெறித்தன. அரசன் தவறு செய்ததை நினைத்து நடுநடுங்கிப் போனான். "அறத்தை சிதைத்த என் ஆயுள் அழிக" என்று சொல்லி மாண்டு போனான்.

## 14. வினைச்சொல்

**பக்கம் 61**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வினைச்சொல்
2. தெரிநிலை வினைமுற்று
3. குறிப்பு வினைமுற்று
4. எச்சம்
5. இரண்டு

**ஆ) பொருத்துக.**

1. தெரிநிலை வினைமுற்று
2. குறிப்பு வினைமுற்று
3. ஏவல் வினைமுற்று
4. குறிப்பு பெயரெச்சம்
5. தெரிநிலை வினையெச்சம்

## இ) வினாக்களுக்கு விடையளி.

1. வினைச்சொல் என்ன? சான்று தருக.

   ஓர் எழுவாயின் வினையை (தொழிலை) உணர்த்துவது வினைச்சொல் எனப்படும். வினைச்சொல் திணை, பால், எண், இடம், காலம் போன்றவற்றை தெளிவாக உணர்த்தும். வேற்றுமையை ஏற்காமல் வரும்.

   எ.கா. மலர்விழி ஓடினாள்.

   மேற்கண்ட தொடரில் "மலர்விழி" என்பது எழுவாய், "ஓடினாள்" என்பது வினைச்சொல் ஆகும்.

2. வினைமுற்று என்பது யாது?

   காலம் மற்றும் தொழிலை வெளிப்படையாகவோ அல்லது குறிப்பாகவோ உணர்த்தி திணை, பால் ஆகியவற்றைக் காட்டும் விகுதியோடு முடிவு பெற்ற வினைச்சொல் "வினைமுற்று" அல்லது "முற்றுவினை" எனப்படும்.

3. தெரிநிலை வினைமுற்று – விளக்குக.

   செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்ற ஆறும் ஒரு செயல் நடைபெறுவதற்கு முதன்மையானவை ஆகும். இந்த ஆறையும் வெளிப்படையாக உணர்த்தி வரும் வினைமுற்று தெரிநிலை வினைமுற்று எனப்படும்.

   எ.கா. அமுதன் ஓவியம் வரைந்தான்.

| | | | |
|---|---|---|---|
| செய்பவர் | – அமுதன் | செயல் | – வரைதல் |
| கருவி | – தூரிகை | காலம் | – இறந்தகாலம் |
| நிலம் | – அமுதனின் வீடு | செய்பொருள் | – ஓவியம் |

   மேற்கண்ட எடுத்துக்காட்டானது ஒரு செயல் நடைபெறுவதற்கு தேவையான ஆறு பொருள்களையும் 'வரைந்தான்' என்ற சொல்லின் மூலமாக வெளிப்படையாகத் தெரிவிக்கின்றது.

4. குறிப்பு வினைமுற்று என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

   பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டு தோன்றி, காலத்தை வெளிப்படையாகக் காட்டாமல் அச்செயலை செய்பவராகிய கருத்தாவை மட்டும் வெளிப்படையாகக் காட்டும் வினைமுற்று குறிப்பு வினைமுற்று எனப்படும்.

5. வியங்கோள் வினைமுற்று, ஏவல் வினைமுற்று வேறுபடுத்துக.

| வியங்கோள் வினைமுற்று | ஏவல் வினைமுற்று |
|---|---|
| வாழ்த்துதல், வைதல், வேண்டல், விதித்தல் முதலிய பொருள்களில் வரும். | கட்டளைப் பொருளில் மட்டுமே வரும். |
| இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் உரியதாக அமையும். | முன்னிலைக்கு மட்டும் உரியதாக அமையும். |
| ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை. | ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு. |

6. எச்சம் என்பது யாது? அதன் வகைகள் யாவை?

பொருள் முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் எச்சம் எனப்படும். திணை, பால், எண், இடம் முதலியவற்றை உணர்த்தாமல், எச்சத்திற்கு உரிய விகுதிகளைப் பெற்று வரும். காலத்தையும், செயலையும் உணர்த்தி பெயர்ச்சொல்லையோ அல்லது வினைச்சொல்லையோ கொண்டு முடியும். பெயரெச்சம் மற்றும் வினையெச்சம் என்பன எச்சத்தின் வகைகள் ஆகும்.

7. பெயரெச்சம் என்றால் என்ன?

திணை, பால் ஆகியவற்றைக் காட்டும் விகுதி குறைந்து எச்சமாய் நின்று செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக் குறிக்கும் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடியும் வினைச்சொல் பெயரெச்சம் எனப்படும். பெயரெச்சம் முக்காலத்தையும் உணர்த்தும்.

எ.கா. படித்த மாணவன் – இறந்தகாலப் பெயரெச்சம்
படிக்கின்ற மாணவன் – நிகழ்காலப் பெயரெச்சம்
படிக்கும் மாணவன் – எதிர்காலப் பெயரெச்சம்

8. தெரிநிலைப் பெயரெச்சத்தை விளக்குக.

காலத்தையும், செய்யும் செயலையும் வெளிப்படையாக உணர்த்தி, அறுவகைப் பொருட்பெயர்களில் ஏதேனும் ஒன்றினைக் கொண்டு முடியும் பெயரெச்சம் தெரிநிலைப் பெயரெச்சம் எனப்படும்.

எ.கா. வரைந்த ஓவியம்.

இத்தொடரில் உள்ள 'வரைந்த' என்னும் சொல் இறந்தகாலத்தையும், 'வரைதல்' என்னும் செயலையும் தெளிவாகக் காட்டுகிறது.

9. வினையெச்சம் என்றால் என்ன? சான்று தருக.

வினையையும், காலத்தையும் உணர்த்தி திணை, பால் ஆகியவற்றை உணர்த்தும் விகுதி குறைந்து வினைமுற்றினை ஏற்றுக் கொண்டு முடியும் எச்சவினைச்சொல் வினையெச்சம் எனப்படும். 'வந்து' என்ற சொல்லானது சென்றாள், படித்தான், உண்டான் ஆகிய வினைச்சொற்களுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடிவுபெறும்.

10. குறிப்பு வினையெச்சத்தை விவரி.

காலத்தையும், செயலையும் வெளிப்படையாக காட்டாமல் பண்பினை மட்டும் குறிப்பால் உணர்த்தும் வினையெச்சம் குறிப்பு வினையெச்சம் எனப்படும்.

எ.கா. மெல்ல நடந்தான்.

இத்தொடரில் 'மெல்ல' என்னும் சொல் காலத்தை உணர்த்தாமல், 'மெதுவாக' என்னும் பண்பை மட்டும் உணர்த்துகிறது.

## 15. உயிர்களிடத்தில் அன்பு வேண்டும்

**பக்கம் 65**

### அ) பிரித்து எழுதுக.

1. அடி + வாரம்
2. கோடை + காலம்
3. தமிழ் + நாடு
4. காப்பு + அகம்
5. பள்ளி + கூடம்

### ஆ) வினாக்களுக்கு விடையளி.

1. கண்ணனின் குணநலன்களை விளக்குக.

கண்ணன் மிருகங்கள், பறவைகள் மீது மிகுந்த அன்புடையவன். யாரேனும் விலங்குகளை துன்புறுத்துவதைக் கண்டால் அவன் மனம் மிகவும் வருந்தும். இதற்காகச் சில சமயங்களில் அவன் மற்ற சிறுவர்களிடம், அவர்கள் செய்யும் தவறை எடுத்துக் கூறுவான். அதனால் சிலர் அவனைச் "சித்தார்த்தன்" எனக் கேலி செய்தனர். எனினும் அவன் பிராணிகளிடம் கொண்ட அன்பு ஒரு சிறிதும் குறையவில்லை.

2. கோசாலை மேலாளர் கண்ணனை பாராட்டிய நிகழ்வை விளக்குக.

கோசாலை மேலாளர் கண்ணனிடம், "தம்பி, இந்த மாடுகளை முன்னரே உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார். கடந்த கோடைக்காலத்தில் தங்கள் வட்டாரத்தில் நிலவிய வறட்சி பற்றியும், அம்மாடுகளுக்குத் தான் தண்ணீர் இறைத்து வழங்கியதைப் பற்றியும் கண்ணன் கூறினான். விலங்குகள் மீது கண்ணன் கொண்டிருக்கும் அன்பைக் கண்டு மகிழ்ந்த மேலாளர் அவனைப் பாராட்டினார்.

3. கோசாலை என்றால் என்ன? விளக்குக.

அரசு பொறுப்பேற்று நடத்தும் மாடுகளின் காப்பகத்துக்குக் "கோசாலை" என்று பெயர். கோடைக்காலம் மற்றும் வறட்சியின் போது தங்கள் மாடுகளை வளர்க்க இயலாத உழவர்கள், கோசாலையில் ஒப்படைத்துவிடுவார்கள். அங்கு அலுவலர்கள், கால்நடை ஆய்வாளர்கள், பராமரிப்பவர்கள் எனப் பலர் இருப்பார்கள். அவர்கள் அம்மாடுகளைக் கவனமாக வளர்ப்பார்கள். மாடுகளைக் குளிப்பாட்டுவது, சத்தான தீவனங்களை அளிப்பது, தொழுவங்களைச் சுத்தம் செய்வது, உரக்கிடங்குகள் அமைப்பது, பால் கறப்பது போன்ற எல்லாப் பணிகளும் அங்குச் சிறப்பாக நடைபெறும்.

## 16. இயற்கைச் செல்வம்

**பக்கங்கள் 69-70**

**அ) பிரித்து எழுதுக.**

1. செம்மை + தீ
2. பசுமை + தமிழ்
3. வான் + கோழி
4. ஆடல் + கலை

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. ஐம்பூதங்கள் யாவை?

நிலம், நீர், நெருப்பு, ஆகாயம், காற்று ஆகியன ஐம்பூதங்கள் ஆகும்.

2. "இயற்கைச் செல்வம்" பாடலில் பாரதிதாசன் எவ்வாறு இயற்கையை வர்ணித்துள்ளார்?

விரிந்த வானம், திரிந்த காற்று, நீர், நிலம், நெருப்பு என்னும் ஐம்பூதங்களையும் அளித்துள்ளாய். கதிரவன், நிலவு என படைத்த உன் செயல்கள் அனைத்தும் புதுமை, புதுமையேயாகும்.

அசைகின்ற உலகையும், ஒலிக்கின்ற கடல் அலைகளையும் படைத்தாய்; ஆசையுடன் காணும் வண்ணம் நிலங்களை நான்கு திசைகளிலும் விரியச் செய்தாய்; செல்வங்களாகிய பொருட்களை அளித்து, இயலாகிய பைந்தமிழையும் பேசச் செய்தாய். இசையாகிய இனிய தமிழை பறவை போன்ற இனிமைக் குரலில் பாடிட வழி செய்தாய்.

உலகிலுள்ள அனைத்தையும் அசையும் படி செய்தாய்; உயிர்கள் அனைத்திலும் அசைவைச் சேர்த்தாய்; தமிழ் சொல், இசை போன்றவற்றில் இனிமையை சேர்த்து எம்மை அனுபவிக்கச் செய்தாய்; மயில், வான்கோழி என பறவைகள் காட்டும் அசைவினால் துன்பம் விலக்கும் ஆடற்கலையையும் வளர்த்த நீ வாழ்க! என பாரதிதாசன் இயற்கையை போற்றி வணங்குகிறார்.

3. பாரதிதாசன் – குறிப்பு வரைக.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள், 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் புதுச்சேரியில் பிறந்தார். இவரது பெற்றோர் கனகசபை முதலியார்–இலக்குமி அம்மாள் ஆவர். பாரதிதாசனின் இயற்பெயர் கனகசுப்புரத்தினம் ஆகும். பாரதிதாசன் இளம் வயதிலிருந்தே தமிழ்மொழியின் மீது மிகுந்த பற்றுடையவராகத் திகழ்ந்தார். இவர் பாரதியார் மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்ததால் தனது பெயரை "பாரதிதாசன்" என மாற்றிக் கொண்டார். பாண்டியன் பரிசு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, தமிழ் இயக்கம், இசையமுது, குயில் பாட்டு, தமிழச்சியின் கத்தி, பாரதிதாசன் ஆத்திசூடி, பிசிராந்தையார் என்பன இவரின் முக்கிய படைப்புகளாகும். புரட்சி கவிஞர், புரட்சிக்கவி என்ற சிறப்புப் பெயர்களாலும் போற்றப்படுகிறார். இத்தகைய சிறப்புமிக்க பாரதிதாசன் அவர்கள், 1964 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் இயற்கை எய்தினார்.

## 17. முத்தொள்ளாயிரம்

**பக்கங்கள் 72-73**

### அ) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஆ) அரக்கு 2. அ) சேறு 3. அ) வீரம்
4. ஈ) முத்துகள் 5. இ) பாக்கு

### ஆ) பிரித்து எழுதுக.

1. அரக்கு + ஆம்பல் 2. கை + சிறகு 3. புள் + இனம்
4. மேல் + இருந்து 5. வெண்மை + குடை

### இ) வினாக்களுக்கு விடையளி.

1. பறவைகள் அஞ்சியதற்கான காரணம் யாது?

சேறுபட்ட நீர்மிக்க வயல்களில் அரக்கு நிறம் கொண்ட செவ்வாம்பல் மலர்கள் பூத்துள்ளன. அதைக்கண்ட நீர்ப்பறவைகள் தண்ணீரில் தீப்பிடித்து விட்டது என்று அஞ்சி விரைந்து சென்று தம் குஞ்சுகளைத் தீயிலிருந்து காப்பாற்ற நினைத்து சிறகுகளைப் படபடவென அடித்து அவற்றை அணைத்துக் கொண்டன.

2. சோழ நாட்டின் வலிமையைப் பற்றி எழுதுக.

நெல்லை அறுவடை செய்த பிறகு அதை காவல் காக்கும் உழவர்கள், நெற்போரின் மீது நின்று கொண்டு மற்ற உழவர்களை "நாவலோ" என்று கூவி அழைப்பது வீரர்கள் போர்க்களத்தில் கொல்யானை மீது ஏறி நின்று "நாவலோ" என்று மற்ற

வீரர்களை அழைப்பது போலிருந்தது. இத்தகைய வலிமையான யானைப்படைகளை உடையதே சோழ நாடாகும். சோழ நாடு வளமும் வீரமும் மிகுந்து விளங்கும் நாடாகும்.

3. பாண்டிய நாட்டின் வளம் யாது? அதை முத்தொள்ளாயிரம் எவ்வாறு எடுத்துரைக்கிறது?

சங்குகள் கடல் மணலில் ஈனுகின்ற முட்டைகள் முத்துகளைப் போலிருந்தன. தரையில் கிடக்கும் புன்னை மரத்தின் மொட்டுகள் முத்துகளைப் போலிருந்தன. பந்தலைப் போல காட்சியளிக்கும் பாக்கு மரங்களிலுள்ள பாளைகளிலிருந்து சிந்தும் மணிகள் முத்துகளைப் போலிருந்தன. முத்துகள் பதித்த வெண்கொற்றக் குடையை உடைய பாண்டிய மன்னனின் நாடானது முத்து வளம் மிகுந்த நாடாகும்.

## 18. காட்டுயிரிகள்

**பக்கங்கள் 78-79**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. காட்டுயிரிகள் 2. ஆறறிவு 3. ஐந்தறிவு
4. ஆற்றல் 5. 1972

**ஆ) பொருத்துக.**

1. புல், மரம் 2. நத்தை, சங்கு 3. எறும்பு, கரையான்
4. நண்டு, வண்டு 5. பறவை, விலங்கு 6. மனிதர்கள்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. இவ்வுலகில் என்னென்ன இருப்பதாக எழிலின் அப்பா கூறினார்?

இவ்வுலகில் ஐம்பூதங்களும், உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களும் இருப்பதாக எழிலின் அப்பா கூறினார்.

2. ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிரினங்களை பட்டியலிடுக.

- ஓரறிவு – புல், மரம்
- இரண்டறிவு – நத்தை, சங்கு
- மூன்றறிவு – எறும்பு, கரையான்
- நான்கறிவு – நண்டு, வண்டு
- ஐந்தறிவு – பறவை, விலங்கு
- ஆறறிவு – மனிதர்கள்

3. தாவரங்கள் மற்றும் விலங்குகள் ஏன் சமநிலையில் இருக்க வேண்டும்?

இயற்கை வாழிடச் சூழலில் குறிப்பிட்ட ஒரு விலங்கினம் அழியும்போது, இயற்கை சமநிலையில் மாற்றம் ஏற்படும். இதனால், பல பின் விளைவுகள் ஏற்படும். எனவே, தாவரங்களும் விலங்குகளும் சமநிலையில் இருப்பதே உலகிற்கு நல்லதாகும்.

4. உணவுச் சங்கிலி ஒன்றை எழுதுக.

புல் → வெட்டுக்கிளி → தவளை → பாம்பு → கழுகு

5. காடுகளால் கிடைக்கும் பயன்களை எழுதுக.

இந்தியாவில் எட்டில் ஒரு பங்கு அளவு காடுகள் உள்ளன. காடுகள் மழை பெய்யக் காரணமாக இருப்பதோடு மட்டுமல்லாமல், வன விலங்குகளுக்கும் புகலிடமாகவும் உள்ளன. மண் அரிப்பைத் தடுத்தல், சிற்றாறுகள் தோன்றக் காரணமாக இருத்தல், தொழில் வளர்ச்சிக்கு உதவுதல், மருந்துப் பொருள்கள், மூலிகைகள் என எண்ணற்ற நன்மைகள் நமக்குக் காடுகளால் கிடைக்கின்றன.

## 19. தொகைநிலைத் தொடர்

**பக்கங்கள் 82-83**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. இரண்டாம் 2. மறைந்து வருவது 3. நான்காம்
4. இருபெயரொட்டுப் பண்புத்தொகை 5. இடைச்சொல்

**ஆ) பொருத்துக.**

1. வேற்றுமைத்தொகை 2. வினைத்தொகை
3. உவமைத்தொகை 4. உம்மைத்தொகை
5. பண்புத்தொகை

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. தொகைநிலைத் தொடர் என்றால் என்ன?

இரண்டு சொற்கள் சேரும்போது அவற்றிற்கிடையே வேற்றுமை, வினை, பண்பு போன்றவற்றின் உருபுகள் மறைந்து வருவது தொகைநிலைத் தொடர் எனப்படும்.

2. வேற்றுமைத்தொகையை சான்றுடன் விளக்குக.

இரண்டு சொற்களுக்கு இடையே வேற்றுமை உருபானது மறைந்து வந்து பொருளை உணர்த்துவது வேற்றுமைத்தொகை எனப்படும்.

“புத்தகம் படித்தாள்” என்ற தொடரானது புத்தகத்தைப் படித்தாள் என்னும் தொடராகவே இருந்திருக்க வேண்டும். இரண்டு சொற்களுக்குமிடையே “ஐ” என்னும் இரண்டாம் வேற்றுமையின் உருபானது மறைந்து வந்துள்ளது.

3. வினைத்தொகை என்பது யாது?

காலம் காட்டும் இடைநிலை மற்றும் பெயரெச்சம் மறைந்து வருவது வினைத்தொகை எனப்படும்.

எ.கா. ஊறுகாய்

'ஊறுகாய்' என்பது ஊறியகாய், ஊறுகின்ற காய், ஊறும் காய் என பொருள் தரும். இது இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற முக்காலத்தையும் வெளிப்படுத்துகிறது.

4. பண்புத்தொகை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

பண்புப்பெயருக்கும், பண்பை உடைய பொருளைக் குறிக்கும் சொல்லுக்கும் இடையே "மை" என்னும் பண்புப்பெயர் விகுதியும், "ஆன", "ஆகிய" என்னும் பண்பு உருபுகளும் மறைந்து வருவது பண்புத்தொகை எனப்படும்.

எ.கா. வெண்ணிலவு

மேற்கண்ட எடுத்துக்காட்டில் "வெண்ணிலவு" என்பது வெண்மையான நிலவு என்பதை குறிக்கிறது. இதில் 'மை' என்னும் பண்புப்பெயர் விகுதியும், 'ஆன' என்னும் பண்பு உருபும் வந்துள்ளது.

5. "பனைமரம்" என்ற சொல்லிலுள்ள தொகையை விளக்குக.

முதலில் சிறப்புப் பெயரும், அதனை தொடர்ந்து பொதுப் பெயரும் வந்திருக்க, இடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு மறைந்து வருவது இருபெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்.

எ.கா. பனைமரம்

"பனைமரம்" என்ற சொல் பனையாகிய மரம் என பொருள் தருகிறது. இதில் 'பனை' என்பது சிறப்புப் பெயர், 'மரம்' என்பது பொதுப் பெயர். இவை இரண்டிற்கும் இடையில் 'ஆகிய' என்னும் பண்பு உருபு மறைந்து வந்துள்ளது.

6. உவமைத்தொகை என்றால் என்ன?

உவமைக்கும் உவமேயத்துக்கும் இடையில் போல, புரைய, ஒப்ப, உறழ, போன்ற, நிகர, அன்ன முதலிய உவம உருபுகளுள் ஏதேனும் ஒன்று மறைந்து வருவது உவமைத்தொகை எனப்படும்.

எ.கா. மலர்விழி

மேற்கண்ட எடுத்துக்காட்டில் உள்ள "மலர்விழி" என்னும் சொல் மலர் போன்ற விழி என்னும் பொருளை தருகிறது. இதில் 'மலர்' என்பது உவமை, 'விழி' என்பது உவமேயம்.

7. உம்மைத்தொகையை விவரி.

சொற்கள் ஒன்றோடொன்று தொடர்ந்து வரும்போது அவற்றிற்கு இடையிலும், இறுதியிலும் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து நின்று பொருளை உணர்த்துவது உம்மைத்தொகை எனப்படும்.

எ.கா. இரவுபகல், பால்பழம்

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் உள்ள சொற்களை விரித்து

எழுதினால் 'இரவும் பகலும்', 'பாலும் பழமும்' என பொருள் தரும். சொற்களின் இடை மற்றும் இறுதியில் 'உம்' என்னும் இடைச்சொல் மறைந்து வந்துள்ளது.

## 20. மரத்தின் வேண்டுகோள்

**பக்கம் 86**

**அ) பிரித்து எழுதுக.**

1. விடியல் + காலை 2. விளை + நிலம் 3. நெடுமை + காலம்
4. மாசு + அடையாமல் 5. பரப்பு + அளவு

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. விழிப்பு 2. மாலை 3. துன்பம்
4. பக்கம் 5. பொய்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. அமுதனுக்கு ஏன் உறக்கம் வரவில்லை?
மறுநாள் காலை செல்லவிருக்கும் இன்பச் சுற்றுலாவைப் பற்றி நினைத்துக்கொண்டு இருந்ததால் அமுதனுக்கு உறக்கம் வரவில்லை.

2. அமுதனின் கனவில் வந்தது யார்?
அமுதனின் கனவில் வந்தது ஒரு வாடிப்போன மரம்.

3. மரம் வருத்தமாக இருந்ததற்கான காரணம் என்ன?
அமுதன் நின்று கொண்டிருந்த இடம் சில ஆண்டுகளுக்கு முன்னர் வண்ண வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் சோலையாக இருந்தது என்றும், எங்கு பார்த்தாலும் செடிகள், கொடிகள், மரங்கள் என பசுமையாக இருந்தது என்றும் கூறியது. மேலும் கீச், கீச் என ஒலி எழுப்பும் பறவைகள், மரங்களின் நிழலில் ஓய்வெடுக்கும் கால்நடைகள், கிளைகளில் ஊஞ்சல்கட்டி ஆடும் சிறுவர் சிறுமியர் என அந்த இடமே மிகவும் இனிமையாக இருந்தது என்றும் கூறியது. ஆனால், தற்போது அவை இருந்த இடமே தெரியாமல் அழிந்துவிட்டன எனவும், தான் மட்டும் தான் இங்குத் தனித்து நிற்பதாகவும் வருத்தத்துடன் கூறியது.

4. அமுதனிடம் மரம் விடுத்த வேண்டுகோள் யாது?
மரங்களின் அழிவு மனிதர்களின் பேரழிவு என மரம் அமுதனிடம் கூறியது. எனவே, இயற்கையைப் போற்றி, காட்டு வளத்தை பெருக்க வேண்டும் எனவும், சுற்றுப்புறம் மாசடையாமல் பார்த்துக்

கொள்ளவேண்டும் எனவும் கூறியது. மேலும் தங்களின் வழித்தோன்றல்களையாவது நன்றாக வாழ வழி செய்யுமாறு கண்ணீர் மல்க வேண்டியது.

## 21. மூதுரை

**பக்கம் 92**

**அ) பிரித்து எழுதுக.**

1. மகிழ் + இனிது
2. மண் + ஈர்
3. நன்மை + தாமரை
4. சிறுமை + ஊறல்

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. சிறிது
2. தொலைவே
3. கெட்ட
4. கல்லாதார்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. தாழம் பூவின் மணம் எத்தகையது?
   தாழம் பூவின் மணம் இனிமையற்றது.

2. உருவத்தில் சிறியோரை ஏன் வெறுக்கக்கூடாது?
   கடல் வடிவத்தில் பெரியது என்றாலும், அதன் நீரானது உடம்பில் உள்ள அழுக்கை கழுவுவதற்குக் கூடப் பயன்படுவதில்லை. ஆனால், அதன் பக்கத்தில் தோண்டப்படும் சிறிய மணற் குழியில் சுரக்கும் ஊற்று நீரானது, அழுக்கு தீரக் குளிப்பதற்கு மட்டுமின்றி, குடிப்பதற்கும் பயன்படுகிறது. ஆகவே, ஒருவரை உருவத்தில் சிறியவர் என்று அவரை மதித்து நடக்காமல், வெறுத்து புறந்தள்ளக் கூடாது.

3. அன்னப் பறவை எதை தேடிச் செல்லும்?
   நல்ல தாமரை செடிகள் உள்ள குளத்தையே அன்னப் பறவை தேடிச் செல்லும்.

4. காக்கையின் குணத்தை உடையவர் யார்?
   கல்வி அறிவு இல்லாத மூர்க்க குணம் கொண்டோரே காக்கையின் குணத்தை உடையவராவர்.

5. மூதுரை – குறிப்பு வரைக.
   மூதுரை = மூப்பு + உரை. ஔவையார் இயற்றிய நீதி நூலே மூதுரை ஆகும். மிகப் பழமையான அறக்கருத்துகளைக் கொண்டிருப்பதால் மூதுரை என்று அழைக்கப்படுகிறது. இந்நூலிற்கு வாக்குண்டாம் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இதன் கடவுள் வாழ்த்துப் பாடல்

“வாக்குண்டாம்” என்று வழங்கப்படுவதால் இப்பெயர் ஏற்பட்டது. இந்நூலில் 30 வெண்பா பாடல்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாடலும் ஒரு அறக்கருத்தை வலியுறுத்துகின்றது.

## 22. திருக்குறள்

**பக்கம் 95**

**அ) பிரித்து எழுதுக.**

1. குறி + எதிர்ப்பு  2. மேல் + உலகம்  3. உரை +ஆமை
4. பசி + ஆற்றல்  5. தீண்டல் + அரிது

**ஆ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஈகை  2. விண்ணுலகம்  3. கடும்பசியை
4. வறுமையால்  5. துன்பம்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. தீமையானது எது? சிறந்தது எது?
நல்லது தான் என்று எவரேனும் சொன்னாலும் பிறரிடம் ஒன்றைப் பெறுவது தீமையானது. விண்ணுலகம் கிடைக்காது என்றாலும் ஏதும் இல்லாதவர்க்குக் கொடுப்பதே சிறந்தது.

2. “இன்னா திரக்கப் படுதல்” எனத் தொடங்கும் குறளின் பொருளை எழுதுக.
தம்மிடம் வந்து யாசித்து நிற்பவரின் மலர்ந்த முகத்தைக் காணும் வரை, அவருக்காக இரக்கப்படுவதும் கொடுக்க இருப்பவருக்கு ஒரு துன்பமாகவே தோன்றும்.

3. பொருள் பெற்ற ஒருவன் அதை சேர்த்து வைக்கும் இடமாக வள்ளுவர் குறிப்பிடுவது யாது?
வறியவரின் கடும்பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும்.

4. வறுமையால் இறப்பதை விடக் கொடியது எது?
பிறர்க்கு ஈவதால் குறையக் கூடுமென்று எவருக்கும் தராமல் தானே தனித்து உண்பது வறுமையால் இறப்பதைவிடக் கொடுமையானது.

5. “சாதலின் இன்னாத தில்லை” – குறள் விளக்கம் தருக.
சாவதைவிடத் துன்பமானது வேறொன்றும் இல்லை. ஆனால், வறியவர்க்கு எதுவும் கொடுக்க முடியாத நிலை வந்தபோது அச்சாதலும் இனியதே ஆகும்.

## 23. கலீலியோ கலிலி

**பக்கம் 98**

**அ) பிரித்து எழுதுக.**

1. ஊசல் + ஆட்டம் 2. முன் + ஓடி 3. மருத்துவம் + துறை
4. கணக்கு + இயல் 5. கருமை + விழி

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. தொடர் விளக்கை வைத்து கலீலியோ கண்டறிந்தவை யாவை?
தொடர் விளக்கை வைத்து கலீலியோ மருத்துவத்துறையில் நாடித்துடிப்பைக் கணக்கிடும் கருவியைக் கண்டுபிடித்தார்.

2. கலீலியோ எப்போது பிறந்தார்?
கலீலியோ இத்தாலி நாட்டிலுள்ள பைசா நகரத்தில் 1564 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ஆம் நாள் பிறந்தார்.

3. அரிஸ்டாட்டிலின் கருத்தை ஏற்றுக் கொள்ளாத கலீலியோ என்ன செய்தார்?
அரிஸ்டாட்டிலின் கருத்தை கலீலியோ ஒப்புக் கொள்ளவில்லை. எனவே, தன்னுடைய கருத்தை ஆய்வின் மூலம் மெய்ப்பித்துக் காட்ட விரும்பினார். பொதுமக்கள் முன்னிலையில் பைசா கோபுரத்தில் தாமே ஏறி நூறு பவுண்டு (கிலோ) எடையும், ஒரு பவுண்டு (கிலோ) எடையும் கொண்ட இரு இரும்புக்குண்டுகளை ஒரே நேரத்தில் மேலிருந்து கீழே விழச்செய்தார். அவை இரண்டும் ஒரே நேரத்தில் தரையைத் தொட்டன. அதைக் கண்ட பின்னர் பொதுமக்களும் கலீலியோ கூறிய கருத்தை ஏற்றுக் கொண்டனர்.

4. கலீலியோ கண்டறிந்த தொலைநோக்கியைப் பற்றி எழுதுக.
கலீலியோ கண்டறிந்த தொலைநோக்கி வானியல் ஆய்வில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தியது. தொலைவில் உள்ள பொருளிலிருந்து வரும் ஒளிக்கதிரைக் கோள ஆடியின் மூலம் ஒருங்குதிரட்டிக் கருவிழிக்குக் கொடுத்தால், அதன் திறன் மிகும் என்பதனை உணர்ந்தார். இதனடிப்படையில் 1610 ஆம் ஆண்டு தொலைநோக்கியை அமைத்து விண்வெளியை ஆய்வு செய்தார். பால்வீதி என்பது பலகோடி விண்மீன்களின் தொகுதி என மெய்ப்பித்தார். நிலவின் மேற்பரப்பு கரடு முரடானது என்றும், மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்தது என்றும் தொலைநோக்கி மூலம் கண்டறிந்து கூறினார்.

5. பூமியின் மையம் பற்றி கோபர்நிகசு கூறியது என்ன?
அண்டத்தின் மையம் பூமியல்ல; சூரியனே அண்டத்தின் மையமாகும்

என்பதே அறிஞர் கோபர்நிகசு கூறிய கருத்தாகும். மேலும், சூரியனைப் பூமியும் பிற கோள்களும் சுற்றி வருகின்றன. சூரியன் நகருவதாகத் தோன்றுவது பூமியின் சுழற்சியினால்தான் என்னும் கருத்தையும் மெய்ப்பித்தார்.

## 24. தொகாநிலைத் தொடர்

**பக்கம் 102**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. ஒன்பது 2. எழுவாய் 3. விளித்தொடர்
4. மகிழ்ந்தான் 5. அடுக்குத்தொடர்

**ஆ) பொருத்துக.**

1. எழுவாய்த் தொடர் 2. வினைமுற்றுத் தொடர்
3. பெயரெச்சத் தொடர் 4. வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
5. வினையெச்சத் தொடர்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. தொகாநிலைத் தொடர் என்றால் என்ன?

ஒரு தொடரில் அமைந்துள்ள இரண்டு சொற்களுக்கு இடையில் எவ்வித சொல்லும், உருபும் மறையாமல் வந்து பொருளை உணர்த்துவது தொகாநிலைத் தொடர் எனப்படும்.

எ.கா. மலர்விழி பாடினாள்.

மேற்கண்ட தொடரில் 'மலர்விழி' என்பது எழுவாய், 'பாடினாள்' என்பது பயனிலை ஆகும்.

2. தொகாநிலைத் தொடர் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

தொகாநிலைத் தொடர் ஒன்பது வகைப்படும். அவை,

- எழுவாய்த் தொடர்
- விளித்தொடர்
- வினைமுற்றுத் தொடர்
- பெயரெச்சத் தொடர்
- வினையெச்சத் தொடர்
- வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்
- இடைச்சொல் தொடர்
- உரிச்சொல் தொடர்
- அடுக்குத்தொடர்

3. எழுவாய்த் தொடர் என்றால் என்ன?

எழுவாயைத் தொடர்ந்து பயனிலை அமைந்து, இடையில் வேறு எந்தவொரு சொல்லும் மறையாமல் வருவது எழுவாய்த்தொடர் எனப்படும்.

எ.கா. கந்தன் சென்றான்.

மேற்கண்ட தொடரில் 'கந்தன்' என்னும் எழுவாயைத் தொடர்ந்து 'சென்றான்' என்ற பயனிலை அமைந்துள்ளது.

**4.** வினைமுற்றுத் தொடரை விளக்குக.

வினைமுற்றைத் தொடர்ந்து பெயர்ச்சொல் அமைந்து, இடையில் வேறு எந்தவொரு சொல்லும் மறையாமல் வருவது வினைமுற்றுத் தொடர் எனப்படும்.

எ.கா. படித்தான் பொன்னன்.

மேற்கண்ட தொடரில் 'படித்தான்' என்னும் வினைமுற்று 'பொன்னன்' என்னும் பெயர்ச்சொல்லைக் கொண்டு முடிந்து, இடையில் வேறு எந்தவொரு சொல்லும் மறையாமல் வந்துள்ளது.

**5.** வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் என்பது யாது**?** சான்று தருக.

வேற்றுமை உருபுகள் வெளிப்படையாக அமைந்து, இடையில் வேறு எந்தவொரு சொல்லும் மறையாமல் வந்து பொருளை உணர்த்துவது வேற்றுமைத் தொகாநிலைத் தொடர் எனப்படும்.

எ.கா. பாடலைப் பாடினாள்.

மேற்கண்ட தொடரில் 'ஐ' என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துகிறது.

**6.** இடைச்சொல் தொடருக்கும், உரிச்சொல் தொடருக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை விளக்குக.

| இடைச்சொல் தொடர் | உரிச்சொல் தொடர் |
|---|---|
| இடைச்சொல்லுடன் பெயர்ச்சொல்லோ அல்லது வினைச்சொல்லோ வெளிப்படையாக அமைந்து, வேறு எந்தவொரு சொல்லும் மறையாமல் வருவது இடைச்சொல் தொடர் எனப்படும்.<br>எ.கா. மற்றொன்று (மற்று + ஒன்று)<br>மேற்கண்ட சொல்லில் 'மற்று' என்னும் இடைச்சொல் 'ஒன்று' என்னும் பெயர்ச்சொல்லுடன் வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துகிறது. | உரிச்சொல்லுடன் பெயர்ச்சொல்லோ அல்லது வினைச்சொல்லோ வெளிப்படையாக அமைந்து, வேறு எந்தவொரு சொல்லும் மறையாமல் வருவது உரிச்சொல் தொடர் எனப்படும்.<br>எ.கா. சாலவும் நன்று.<br>மேற்கண்ட தொடரில் 'சால' என்னும் உரிச்சொல் 'நன்று' என்னும் பெயர்ச்சொல்லுடன் வெளிப்படையாக வந்து பொருளை உணர்த்துகிறது. |

## 25. விதை நெல்

**பக்கங்கள் 104-105**

**அ) பிரித்து எழுதுக.**

1. கடை + குட்டி
2. மரத்து + அடி
3. பயிர் + இட்ட
4. செழிப்பு + ஓடு

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. பெரியவர் தன் மகன்களிடம் என்ன கூறினார்?

   பெரியவர் தன் மகன்களிடம் அவர் காசிக்கு யாத்திரை செல்வதாகவும், அவர்களுக்காக தோட்டத்திலுள்ள மரத்தடியில் ஒரு புதையலை புதைத்து வைத்திருப்பதாகவும், தான் காசிக்கு சென்றவுடன் அதை தோண்டி எடுத்துக் கொள்ளுமாறும் கூறினார்.

2. புங்கமரத்தடியில் மூத்த மகனுக்கு என்ன கிடைத்தது? அதை அவன் என்ன செய்தான்?

   மூத்த மகன் புங்கமரத்தைச் சுற்றித் தோண்டிப் பார்த்தான். ஒரு செப்புப் பானை நிறைய நெல் இருந்தது. அதை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்தான். நெல்லோடு உள்ள செப்புப் பானையை மனைவியிடம் கொடுத்தான். அவள் அதை அடுப்பில் ஏற்றி, அதில் நீர் ஊற்றி, அடுப்பைப் பற்ற வைத்து, நெல்லை அவித்து காயப்போட்டு குத்தி அரிசியாக்கிச் சமைத்துவிட்டாள்.

3. செப்புப் பானையை எடுத்த நடு மகன் என்ன செய்தான்?

   நடு மகன் செப்புப் பானையில் இருந்த நெல்லைப் பார்த்து ஏமார்ந்து போனான். பின்னர் செப்புப் பானையையும், அதிலிருந்த நெல்லையும் விற்று செலவு செய்துவிட்டான்.

4. கடைக்குட்டி மகன் கிடைத்த நெல்லைக் கொண்டு என்ன செய்தான்?

   கடைக்குட்டி மகன் புளியமரத்தைச் சுற்றித் தோண்டினான். அங்கும் ஒரு செப்புப் பானை நிறைய நெல் இருந்தது. அதைப் பார்த்த கடைக்குட்டி மகன், "ஏதாவது விசேசமான நெல்லாக இருக்கும், அதனால் தான் நம் தந்தை இந்த நெல்லை இங்கு புதைத்து வைத்திருக்கிறார்" என்று நினைத்து அந்த நெல்லை நாற்றாக்கி, தனது வயலில் நடவு செய்தான். அது ஓர் அபூர்வ ரகமான வித்தாக இருந்ததால், அந்தப் புதுரக நெல்லைப் பயிரிட்ட இடத்தில் எல்லாம் ஏகபோகமாக நெல் விளைந்தது. அவன் ஒரு சில ஆண்டுகளில் பெரும் பணக்காரனாக ஆகிவிட்டான்.

## 26. மெய்ப்பொருள் கல்வி

**பக்கம் 109**

**அ) பிரித்து எழுதுக.**

1. விலை + இல்லா  2. மெய் + பொருள்  3. அறிவு + உண்டாம்
4. கணக்கு + ஆயர்  5. நன்மை + பெயர்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. மெய்ப்பொருள் கல்வி பாடலின் பொருளை எழுதுக.

   குழந்தையே! குளித்து தலைசீவி, நல்ல துணிகளை அணிந்து, பாட நூல்களை ஏந்தி, அழகுமிகு தோழர் தோழிகளோடு பள்ளிக்கு விரைந்து செல்ல வேண்டும். பள்ளி செல்லும்பொழுது நண்பர்களோடு ஒற்றுமையாக சிரித்துப் பழகி மகிழ வேண்டும். நமது வாழ்க்கைக்குக் கல்விதரும் ஆசிரியர்தம் சொற்கேட்டு நடக்க வேண்டும். நமது வாழ்க்கைத் துணையாக விளங்கும் கல்வியே என்றும் நம்மோடு நிலைத்திருக்கும். அத்தகு கல்வியைக் கற்று நமது வாழ்வில் முன்னேறிப் புகழ்பெற்று விளங்க வேண்டும்.

2. வாணிதாசனின் சிறப்புப் பெயர்களை எழுதுக.

   பாவலரேறு, பாவலர் மணி, தமிழ்நாட்டு வேர்ட்ஸ்வொர்த், தமிழ்நாட்டுத் தாகூர், பு துமைக் கவிஞர் ஆகியன வாணிதாசனின் சிறப்புப் பெயர்கள் ஆகும்.

3. வாணிதாசன் இயற்றிய நூல்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

   - தமிழச்சி
   - கொடிமுல்லை
   - இனிக்கும் பாட்டு
   - தொடுவானம்

## 27. திருக்குறள்

**பக்கம் 112**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. தலைசிறந்த  2. அறிவிலார்  3. பொறுமையை
4. வலிமை  5. உலகம்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. தலைசிறந்த பண்பு என்பது யாது?

   தன்னை தோண்டுபவரையும் விழாமல் தாங்குகின்ற நிலம் போல தம்மை இகழ்வோரையும் பொறுத்துக் கொள்வதே தலைசிறந்த பண்பாகும்.

2. பொறுத்தலை விட நல்லது எது?

வரம்பு கடந்து பிறர் செய்யும் தீங்கை எப்போதும் பொறுக்க வேண்டும். அத்தீங்கை நினைவிலும் கொள்ளாமல் மறந்து விடுதல் பொறுத்தலையும் விட நல்லது.

3. வறுமையுள் வறுமை என்பது யாது?

வறுமையுள் வறுமை என்பது வந்த விருந்தினரைப் போற்றாமல் நீக்குதல் ஆகும்.

4. உலக மக்கள் யாரை மனதுள் வைத்து மதிப்பர்?

தமக்கு தீங்கு செய்தவரைப் பொறுக்காமல் தண்டித்தவரை உலகத்தார் ஒரு பொருட்டாக மதியார்; ஆனால், பொறுத்துக் கொண்டவரைப் பொன்போல மனத்துள் வைத்து மதிப்பர்.

5. “மிகுதியான் மிக்கவை செய்தாரை” – குறள் விளக்கம் தருக.

செருக்கினால் தீங்கானவற்றைச் செய்தவரைத் தாம் தம்முடைய பொறுமை பண்பினால் வென்றுவிட வேண்டும்.

## 28. விடுதலைப் போரில் தமிழகப் பெண்களின் பங்கு

**பக்கங்கள் 115-116**

### அ) பிரித்து எழுதுக.

1. ஐந்து + ஆயிரம்
2. வேடம் + அணிந்து
3. சிறையில் + அடைத்த
4. தெற்கு + நாடு

### ஆ) சேர்த்து எழுதுக.

1. விடுதலையுணர்வு
2. அறப்போராட்டம்
3. தொழிற்பயிற்சி

### இ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வேலுநாச்சியார்
2. 1730
3. முத்து வடுகநாதர்
4. லீலாவதி
5. அம்புஜத்தம்மாள்

### ஈ) வினாக்களுக்கு விடையளி.

1. வேலுநாச்சியார் ஆங்கிலேயர்களை எவ்வாறு வென்றார்?

ஆங்கிலேயர்கள் 1772 ஆம் ஆண்டு சிவகங்கை சீமையின் மீது படையெடுத்தனர். ஆங்கிலேயருக்கும் முத்து வடுகநாதருக்கும் இடையே போர் நடைபெற்றது. அப்போரில், மன்னர் முத்து வடுகநாதர் வீரமரணமடைந்தார். வேலுநாச்சியார், மைசூர் மன்னர் ஐதர் அலியைச் சந்தித்து, ஆங்கிலேயரை எதிர்ப்பது குறித்து கலந்து பேசினார். அவருக்கு உதவ விரும்பிய ஐதர் அலி

ஐயாயிரம் படைவீரர்களை அவருடன் அனுப்பினார். மருது சகோதரர்கள் மற்றும் படை வீரர்களுடன் அணிவகுத்து சென்ற வேலுநாச்சியார் ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போரிட்டார். அப்போரில், கணவரைக் கொன்றவர்களை வென்று, 1780 ஆம் ஆண்டில் சிவகங்கையை மீட்டார்.

2. ‘‘தென்னாட்டின் ஜான்சிராணி’’ என்று அழைக்கப்படுபவர் யார்? ஏன்?

‘‘தென்னாட்டின் ஜான்சிராணி’’ என்று அழைக்கப்படுபவர் அஞ்சலையம்மாள் ஆவார். காந்தியடிகள் கடலூருக்கு வந்தபோது, அவரைச் சந்திப்பதற்கு அஞ்சலையம்மாளுக்கு ஆங்கில அரசு தடை விதித்தது. ஆனால், அஞ்சலையம்மாள் பர்தா வேடமணிந்து, குதிரை வண்டியில் காந்தியடிகளை ஏற்றிச்சென்றார். அதனால், காந்தியடிகள் அஞ்சலையம்மாளைத் தென்னாட்டின் ஜான்சிராணி என்றழைத்தார்.

3. அம்புஜத்தம்மாளின் விடுதலைப் போராட்டப் பங்கினை விளக்குக.

வை.மு. கோதைநாயகி அம்மாள், ருக்குமணி லட்சுமிபதி முதலியவர்களோடு நட்புக் கொண்டு பெண்ணடிமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். மகாகவி பாரதியாரின் பாடல்களைப் பாடி விடுதலையுணர்வை ஊட்டினார். ஆங்கிலேய அரசுக்கு எதிராகச் செயல்பட்டார். அந்நியத் துணிகள் விற்கும் கடைக்கு முன்பாக மறியல் போராட்டம் நிகழ்த்தியதனால் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்தபோதும், மனம் தளராது தான் கற்றுக்கொண்ட மொழிகளைப் பிறருக்குக் கற்றுக்கொடுத்தார்.

## 29. புணர்ச்சி

**பக்கங்கள் 118-119**

### அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. சொல்
2. இரண்டு
3. இயல்பு
4. திரிதல்
5. தோன்றல், திரிதல், கெடுதல்

### ஆ) பொருத்துக.

1. இயல்பு புணர்ச்சி
2. தோன்றல் விகாரம்
3. திரிதல் விகாரம்
4. கெடுதல் விகாரம்

### இ) வினாக்களுக்கு விடையளி.

1. சொல் என்றால் என்ன?

ஓர் எழுத்து தனித்து வந்தோ அல்லது பல எழுத்துகள் தொடர்ந்து வந்தோ பொருள் தருவது சொல் எனப்படும்.

2. புணர்ச்சி என்றால் என்ன?

நிலைமொழியின் இறுதி எழுத்தோடு, வருமொழியின் முதல் எழுத்து சேர்வது புணர்ச்சி எனப்படும்.

3. புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

புணர்ச்சி இரண்டு வகைப்படும். அவை,

- இயல்பு புணர்ச்சி
- விகாரப் புணர்ச்சி

4. இயல்பு புணர்ச்சி என்றால் என்ன? சான்று தருக.

நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் இயல்பாகச் சேருவது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

எ.கா. மலர்விழி + படித்தாள் = மலர்விழி படித்தாள்.

மேற்கண்ட எடுத்துக்காட்டிலுள்ள நிலைமொழியான ‘‘மலர்விழி’’, வருமொழியான ‘‘படித்தாள்’’ உடன் சேரும்போது எவ்வித மாற்றமும் இல்லாமல் ‘‘மலர்விழி படித்தாள்’’ என புணர்ந்துள்ளது.

5. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன? அதன் வகைகளை எழுதுக.

நிலைமொழியானது வருமொழியுடன் சேரும்போது, அவ்விரு சொற்களில் ஏதேனும் ஒன்றிலோ அல்லது இரண்டிலுமோ உள்ள எழுத்துகள் மாற்றம் அடைவது விகாரப் புணர்ச்சி எனப்படும். விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும். அவை,

- தோன்றல் விகாரம்
- திரிதல் விகாரம்
- கெடுதல் விகாரம்

6. தோன்றல் விகாரத்தை விளக்குக.

நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது ஏதேனும் ஓர் எழுத்து புதிதாக தோன்றுவது தோன்றல் விகாரம் எனப்படும்.

எ.கா. வாழை + பழம் = வாழைப்பழம்

மேற்கண்ட எடுத்துக்காட்டில் நிலைமொழியான ‘‘வாழை’’, வருமொழியான ‘‘பழம்’’ உடன் சேரும்போது ‘ப்’ என்ற புதிய எழுத்தானது இடையில் தோன்றியுள்ளது.

7. திரிதல் விகாரம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

நிலைமொழியும், வருமொழியும் சேரும்போது, ஏதேனும் ஒரு சொல்லில் உள்ள ஓர் எழுத்தானது மற்றொரு எழுத்தாகத் திரிவது (மாறுவது) திரிதல் விகாரம் எனப்படும்.

எ.கா. மண் + குடம் = மட்குடம்

மேற்கண்ட எடுத்துக்காட்டில் நிலைமொழியிலுள்ள ‘ண்’ என்ற எழுத்தானது ‘ட்’ என்ற எழுத்தாகத் திரிந்து புணர்ந்துள்ளது.

8. கெடுதல் விகாரத்தை சான்றுடன் விளக்குக.

நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது, நிலைமொழியின் இறுதி எழுத்தானது மறைந்து போதல் கெடுதல் விகாரம் எனப்படும்.

எ.கா. மரம் + வேர் = மரவேர்

மேற்கண்ட எடுத்துக்காட்டில் நிலைமொழியின் இறுதியிலுள்ள 'ம்' என்ற எழுத்தானது மறைந்து (கெட்டுப்) புணர்ந்துள்ளது.

## 30. புத்திசாலி அரசன்

**பக்கங்கள் 122-123**

**அ) பிரித்து எழுதுக.**

1. மலை + நாடு
2. பூ + மாலை
3. கண்டு + அறிந்து
4. வாக்கு + அளித்தான்

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. இகழ் 2. தெற்கு 3. தொலைவே 4. எழுந்து

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. அரசன் பாக்கியநாதனின் குணநலன்களை எழுதுக.

பகவதிபுர மன்னன் பாக்கியநாதன் மிகவும் நல்லவன். தன் நாட்டு மக்களைத் தன் குடும்ப உறுப்பினர்கள் போல் மதித்து அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து உதவி வந்தான். அதனால் பகவதிபுர நாட்டு மக்கள் அவனை எந்த நேரமும் அணுகி தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டார்கள்.

2. மரகதவல்லி என்பவள் யார்?

மரகதவல்லி மலைநாட்டின் அரசி ஆவாள். அவள் அறிவில் சிறந்தவள். எந்தவொரு கேள்விக்கும் தளராது பதில் கூறும் ஆற்றலுடையவள்.

3. மரகதவல்லி எதைச் சோதிக்க விரும்பினாள்?

பகவதிபுர மன்னன் பாக்கியநாதனின் புகழைப் பற்றி கேள்விப் பட்ட அரசி மரகதவல்லி பாக்கியநாதனின் அறிவுத் திறமையை சோதிக்க விரும்பினாள்.

4. பாக்கியநாதனை சந்தித்த மரகதவல்லி என்ன கூறினாள்?

அரசி மரகதவல்லி தன்னுடன் வந்த வீரர்களிடம் இருந்த இரண்டு மாலைகளைத் தன் கைகளில் வாங்கி, அதை மன்னன் பாக்கியநாதனிடம் காண்பித்து, "அரசே! இந்த இரண்டு

மாலைகளில் ஒன்று நிஜப் பூக்களால் தொடுக்கப்பட்டது. இன்னொன்று காகித பூக்களால் தொடுக்கப்பட்டது. நீங்கள் உங்கள் அறிவுத் திறமையால் இரண்டு மாலைகளில் எது நிஜப் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலை என்பதை கண்டறிந்து கூற வேண்டும்'' என்றாள்.

## 31. நம் நாடு

**பக்கங்கள் 126-127**

**அ) பிரித்து எழுதுக.**

1. மக்கள் + என்ற
2. சண்டை + அற்று
3. அச்சம் + இன்றி
4. பணி + புரிந்து

**ஆ) எதிர்ச்சொல் எழுதுக.**

1. சமாதானம்
2. ஆரவாரம்
3. துணிச்சல்
4. தோல்வி

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. ''நம் நாடு'' பாடல் கூறும் செய்திகளை எழுதுக.

இமயம் முதல் கன்னியாகுமரி வரை வசிக்கும் மக்கள் அனைவரும் இந்திய நாட்டின் மக்களே என்ற எண்ணம் கொள்ள வேண்டும். அனைவரும் நமது உறவினர்களே என்று எண்ணி அன்புடனும் பழக வேண்டும். சமயம், சாதி என்ற வேறுபாடுகள் மற்றும் சண்டைகள் எதுவும் இல்லாமல் ஒன்றுமையுடன் வாழவும், அனைத்து மொழிகளுக்கும் சமமான உரிமைகளை பெறவும் அமைதியான தேச சேவையை அச்சமின்றி ஆற்ற வேண்டும். ஏழை மக்களின் அவதிகள் மிகுந்த வறுமையான வாழ்க்கையை மாற்றியமைக்க வேண்டும். உலகிலுள்ள நாடுகளுக்கு எல்லாம் நல்ல மார்க்கம் காட்டும் வண்ணம் நமது நாட்டை உயர்த்திட நாம் என்றும் பணிபுரிந்து வெற்றி மாலையை சூட்ட வேண்டும்.

2. நாமக்கல் கவிஞர் இயற்றிய நூல்களின் பெயர்களை எழுதுக.

- மலைக்கள்ளன்
- நாமக்கல் கவிஞர் பாடல்கள்
- என்கதை
- அவனும் அவளும்
- சங்கொலி

## 32. திருக்குறள்

**பக்கம் 130**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. புறங்கூறாமல் 2. அறநூல்கள் 3. நன்மை
4. சிரிப்பு 5. நண்பர்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. ஒருவனுக்கு நன்மையை தருவது எது?
   ஒருவன் அறத்தைப் போற்றிக் கூறாதவனாய் அறமல்லாதவற்றைச் செய்தாலும், மற்றவனைப் பற்றிப் புறங்கூறாமல் இருக்கிறான் என்றால் அதுவே அவனுக்கு நல்லது.

2. அறநூல்கள் கூறும் உயர்வைத் தருவது எது?
   காணாதபோது ஒருவனைப் பற்றிப் புறங்கூறிப் பொய்யாக நடந்து உயிர் வாழ்தலை விட, வறுமையுற்று இறந்து விடுதல் அறநூல்கள் கூறும் உயர்வைத் தரும்.

3. “அறஞ்சொல்லும் நெஞ்சத்தான்” எனத் தொடங்கும் குறளின் பொருளை எழுதுக.
   ஒருவன் அறத்தை நல்லதென்று போற்றும் நெஞ்சம் இல்லாதவன் என்பதை அவன் மற்றவனைப் பற்றிப் புறங்கூறுகின்ற இழிவினைக் கொண்டு கண்டு கொள்ளலாம்.

4. புறங்கூறி நண்பரைப் பிரிப்போர் யார்?
   மகிழும்படியாகப் பேசி நட்புக் கொள்ளுதல் நன்மை என்று தெளியாதவர், தம்மை விட்டு நீங்கும்படியாகப் புறங்கூறி நண்பரையும் பிரித்து விடுவர்.

5. “ஏதிலார் குற்றம்போல்” – என்ற குறளின் விளக்கத்தை தருக.
   ஒருவன் அடுத்தவருடைய குற்றத்தைக் காண்பது போல் தம் குற்றத்தையும் காண வல்லவனானால், நிலைபெற்ற உயிர் வாழ்க்கைக்குத் துன்பம் எதுவும் வராது.

## 33. மகாகவி பாரதியார்

**பக்கம் 134**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. எட்டயபுரம் 2. சுப்பிரமணியன் 3. மதுரை சேதுபதி உயர்நிலை
4. இந்தியா 5. பார்த்தசாரதி

**ஆ) பிரித்து எழுதுக.**

1. அறம் + போர்
2. கல்வி + அறிவு
3. மாலை + இட்டு
4. ஓர் + இடம்
5. தமிழ் + ஆசிரியர்

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. பாரதியார் எங்கு, எப்போது பிறந்தார்?
திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11 ஆம் நாள் பிறந்தார்.

2. பாரதியின் பெற்றோர் யாவர்?
பாரதியாரின் பெற்றோர் சின்னசாமி ஐயர் மற்றும் இலக்குமி அம்மாள் ஆவர்.

3. பாரதி தந்தையின் எதிர்பார்ப்பு என்னவாக இருந்தது?
தன் புதல்வன் கல்வியறிவில் வளர்ச்சி பெற்று, கணக்கு வழக்குகளில் தேர்ச்சி பெற்று ஜமீன்தாரிடம் தான் பார்க்கும் வேலையைத் தொடர்ந்து பார்த்து தமது வயோதிக காலத்தில் சோறு போடுவான் என்று எதிர்பார்த்தார்.

4. பாரதியின் இளமைப்பருவம் பற்றி எழுதுக.
பாரதி, பள்ளிப்படிப்பை விட்டு விட்டு பாட்டு எழுதும் கலையில் ருசிகொண்டு அலைந்தார். பாட புத்தகங்களில் நாட்டங்கொள்ளாமல் பழம்பெரும் இலக்கியங்களில் தஞ்சம் புகுந்தார்.

5. சுப்பிரமணியனுக்கு பாரதி என்ற பெயரைச் சூட்டியவர் யார்?
தமிழ்ப்பண்புள்ள ஆசிரியர் ஒருவர் சுப்பிரமணியனுக்கு பாரதி என்ற பெயரைச் சூட்டினார்.

## 34. புணர்ச்சி விதிகள்

**பக்கம் 140**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. பண்புப்பெயர்கள்
2. ஈறுபோதல்
3. தன்னொற்றிரட்டல்
4. கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு
5. மகரம்

**ஆ) பொருத்துக.**

1. இடை உகரம் இ ஆதல்
2. இனமிகல்
3. திசைப்பெயரோடு பிறபெயர்
4. திசைப்பெயரோடு திசைப்பெயர்
5. மகர ஈற்றுப் புணர்ச்சி

இ) **வினாக்களுக்கு விடையளி.**

1. ஈறுபோதல் விதியை விளக்குக.

   நிலைமொழியின் இறுதியிலுள்ள "மை" என்ற விகுதியானது மறைந்து போவது ஈறுபோதல் விதி எனப்படும்.

   எ.கா. செம்மை + தமிழ் = செந்தமிழ்

   ஈறுபோதல் விதிப்படி நிலைமொழியின் இறுதியிலுள்ள "மை" விகுதி நீங்கி செந்தமிழ் என்று புணர்ந்துள்ளது.

2. இடை உகரம் இ ஆதல் என்றால் என்ன? சான்று தருக.

   நிலைமொழியின் இறுதியிலுள்ள "மை" என்ற விகுதியானது மறைந்து, இடையிலுள்ள உகரமானது இகரமாக திரிவது இடை உகரம் இ ஆதல் விதி எனப்படும்.

   எ.கா. கருமை + அன் = கரியன்

   இடை உகரம் இ ஆதல் விதிப்படி நிலைமொழியின் இறுதியிலுள்ள "மை" விகுதியானது நீக்கம் பெற்று, "கருமை" என்னும் சொல்லிலுள்ள "கரு" உகரமானது திரிந்து "கரி" என்ற இகரமாக மாற்றமடைந்து கரியன் (கரி + ய் + அன்) என்று புணர்ந்துள்ளது.

3. 'பைங்கூழ்' – இச்சொல்லின் புணர்ச்சி விதியை எழுதி விளக்குக.

   எ.கா. பசுமை + கூழ் = பைங்கூழ்

   - ஈறுபோதல் விதிப்படி நிலைமொழியின் இறுதியிலுள்ள "மை" விகுதி மறைந்து, பசு + கூழ் என்றானது.
   - "அடி அகரம் ஐ ஆதல்" விதிப்படி, நிலைமொழியின் முதல் எழுத்தான 'ப', 'பை' (ப் + ஐ = பை) என்று மாறி பைசு + கூழ் என்றானது.
   - இணையவும் என்ற விதிப்படி உயிர்மெய்யான "சு" மறைந்து, பை + கூழ் என்றானது.
   - இனமிகல் என்ற விதிப்படி வருமொழியின் முதலெழுத்தான 'க்' எழுத்துக்கு இனமான 'ங்' மிகுந்து "பைங்கூழ்" எனப் புணர்ந்தது.

4. முன்னின்ற மெய் திரிதல் விதியை விவரி.

   ஒரு மெய்யெழுத்தானது, மற்றொரு மெய்யெழுத்தாக திரிவது (மாறுவது) முன்னின்ற மெய் திரிதல் விதி ஆகும்.

   எ.கா. செம்மை + கடல் = செங்கடல்

   - ஈறுபோதல் விதிப்படி, நிலைமொழியின் இறுதியிலுள்ள "மை" விகுதி மறைந்து 'செம் + கடல்' என்றானது.
   - 'முன்னின்ற மெய் திரிதல்' என்ற விதிப்படி மகரமானது (ம்) ஙகரமாகத் (ங்) திரிந்து செங் + கடல் = செங்கடல் என்றானது.

**5.** திசைப்பெயர் புணர்ச்சி என்றால் என்ன**?**

கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்பன முதன்மை திசைப்பெயர்கள் ஆகும். திசைப்பெயர்களோடு திசைப்பெயர்களும், பிறபெயர்களும் இணைவது திசைப்பெயர்ப் புணர்ச்சி எனப்படும்.

**6.** திசைப்பெயரோடு திசைப்பெயர் சேருவதற்கான விதியை எழுதுக.

ஒரு திசைப்பெயருடன் மற்றொரு திசைப்பெயர் சேரும்போது நிலைமொழியின் இறுதியிலுள்ள 'க்கு' என்னும் எழுத்துகள் நீங்கி சேரும்.

எ.கா. வடக்கு + கிழக்கு = வடகிழக்கு

வடக்கு + மேற்கு = வடமேற்கு

நிலைமொழியாகிய 'வடக்கு' என்னும் சொல் வருமொழியாகிய கிழக்கு, மேற்கு உடன் சேரும்போது நிலைமொழியின் இறுதியிலுள்ள 'க்கு' நீங்கி வடகிழக்கு, வடமேற்கு என்றானது.

**7.** திசைப்பெயரோடு பிறபெயர் எவ்வாறு புணரும்**?** சான்று தருக.

எ.கா. கிழக்கு + நாடு = கீழ்நாடு

- மேற்கண்ட எடுத்துக்காட்டில் 'கிழக்கு' என்பது திசைப்பெயர்; 'நாடு' என்பது பொதுப்பெயர்.
- முதலில் நிலைமொழியின் இறுதியிலுள்ள 'க்கு' நீங்கி, கிழ + நாடு என்றானது.
- பின்னர் நிலைமொழியிலுள்ள 'ழ' (ழ் + அ = ழ) என்னும் உயிர்மெய்யிலுள்ள 'ழ்' என்னும் மெய்யை விட்டு 'அ' என்ற உயிர் நீங்கியதால் 'கிழ் + நாடு' என்றானது.
- இறுதியில் 'கி' என்ற குறில் 'கீ' என நீண்டு கீழ் + நாடு = கீழ்நாடு என்றானது.

**8.** மகர ஈற்றுப் புணர்ச்சி என்றால் என்ன**?**

இரண்டு சொற்கள் சேரும்போது, நிலைமொழியில் மகர ஈற்றுச் சொல் வந்து, வருமொழியோடு புணர்வது மகர ஈற்றுப் புணர்ச்சி எனப்படும்.

**9.** 'மரக்கால்' – எவ்வகை விதி என்பதை விவரி.

மகர ஈற்றுடன் இணையும் வருமொழியின் முதலில் வல்லினம் இருந்தால் நிலைமொழியின் ஈற்றிலுள்ள மகரம் கெட்டு, வல்லின ஒற்று மிக்குப் புணரும்.

எ.கா. வட்டம் + கல் = வட்டக்கல்

- மேற்கண்ட எடுத்துக்காட்டிலுள்ள நிலைமொழியின் ஈற்றிலுள்ள மகரம் (ம்) கெட்டு 'வட்ட + கல்' என்றானது.

- வருமொழியின் முதலில் வந்துள்ள வல்லினமான ‘க’ என்ற எழுத்தின் வல்லின ஒற்றான ‘க்’ மிக்குப் புணர்ந்து ‘வட்டக்கல்’ என்றானது.

10. ‘நிலம் + கடந்தான்’ எவ்வகை புணர்ச்சி என்பதை எழுதி, புணர்ந்து காட்டு.

மகர ஈற்றுடன் இணையும் வருமொழியின் முதலில் வல்லின எழுத்துடைய சொல் இருந்தால் நிலைமொழியின் மகர ஈற்றானது வருமொழியின் முதலிலுள்ள வல்லினத்திற்கு இனமான மெல்லினமாகத் திரிந்து புணரும்.

எ.கா. நிலம் + கடந்தான் = நிலங்கடந்தான்

மேற்கண்ட எடுத்துக்காட்டிலுள்ள வருமொழியின் முதலெழுத்தாக ‘க’ என்னும் வல்லினம் வந்துள்ளது. எனவே, அதற்கு இனமான மெல்லினம் ‘ங்’ மிகுந்து ‘நிலங்கடந்தான்’ என்றானது.

## 35. வெள்ளித்தட்டும் தங்கத்தட்டும்

**பக்கம் 144**

### அ) பிரித்து எழுதுக.

1. வெள்ளி + தட்டு
2. நன்மை + கொடை
3. தயக்கம் + இன்றி
4. தலை + ஆட்டினார்

### ஆ) வினாக்களுக்கு விடையளி.

1. வள்ளல் சீதக்காதியின் கொடைத் தன்மையை பற்றி எழுதுக.

வள்ளல் சீதக்காதி தானமாகக் கொடுக்கும் சன்மானத்தை ஒரு வெள்ளித்தட்டில் வைத்துக் கொடுக்கும் பழக்கம் கொண்டவர். யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்று சீதக்காதிக்கு மனதில் தோன்றுகிறதோ அவ்வளவு பணத்தைக் கொடுத்து விடுவார்.

2. வெள்ளித்தட்டுகளை கொடுப்பதை குறைக்க காரியதரசி சொன்ன யோசனையை எழுதுக.

கொடை கொடுக்க சொல்லும் பணத்தை ஒரு தங்கத்தட்டில் வைத்துக் கொடுத்தால் நன்கொடை பெற வருகிறவர்களுக்கும் தங்கத்தட்டின் மீதுள்ள பணமுடிப்பை எடுத்துக் கொள்வார்கள். தங்கத்தட்டை யாரும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள். அவ்வாறு செய்தால் வெள்ளித்தட்டுகள் கொடுப்பதை குறைக்க முடியும் என காரியதரசி சொன்னார்.

3. தங்கத்தட்டில் பணப்பையைக் கண்ட சீதக்காதி என்ன செய்தார்?
தானத்தைத் தட்டோடு கொடுக்க வேண்டும் என்பதே சீதக்காதியின் விருப்பம் ஆகும். எனவே, தயக்கம் கொள்ளாமல் சன்மானத்தை தங்கத்தட்டுடனே பெற்றுக் கொள்ளுமாறு புலவரிடம் சீதக்காதி புன்னகையுடன் கூறினார்.

## 36. ஆசிய ஜோதி

**பக்கங்கள் 149-150**

**அ) பிரித்து எழுதுக.**

1. குலத்து + இவனை
2. வெண்மை + ஆடு
3. நிலத்து + உயர்
4. வாங்கி + உண்டு

**ஆ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. புத்தபிரானைக் கண்ட ஆயர்குலச் சிறுவன் செய்த உதவி யாது?
புத்தர் மயங்கிக் கிடந்ததைக் கண்ட ஆயர்குலச் சிறுவன் அவர்மீது வெயில் படாமலிருக்க அருகிலிருந்த மரத்தின் தழைகளை வெட்டி அவரருகில் நட்டு வைத்தான்.

2. புத்தர், சிறுவனிடம் என்ன கேட்டார்?
புத்தர் சிறுவனிடம் கலத்தினிலே கொஞ்சம் பாலைக் கறந்து தருமாறு கேட்டார்.

**இ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. புத்தர் கூறிய அமுதமொழிகளைத் தொகுத்து எழுதுக.
இடர் வரும்போது உள்ளம் இரங்கி மனிதர்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும். பிறப்பினில் யாருக்கும் பெருமை வராது. அவரவர் செய்கையினாலேயே உயர்வு தாழ்வு ஏற்படும்.

2. பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை என்பதனைப் புத்தர் எவ்வாறு விளக்கியுள்ளார்?
   - பிறப்பினால் எவருக்கும் பெருமை ஏற்படாது. மனிதர் வாழ்க்கையில் சிறப்பு வேண்டுமெனில் நல்ல செய்கை வேண்டும்.
   - உடம்பினில் ஓடும் இரத்தத்திலோ, வடியும் கண்ணீரிலோ பேதம் உண்டா? எல்லாருடைய இரத்தமும் சிவப்பு நிறமே எல்லாருடைய கண்ணீரும் உப்பு சுவையே உடையது. எனவே மனிதருக்குள் உயர்வு தாழ்வு அவரவர் செய்யும் நன்மை, தீமையினால் மட்டுமே வரும் என்றார் புத்தர்.

## 37. திருக்குறள்

**பக்கம் 154**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. விட்டொழிக்க 2. வருந்தும் 3. இழிவான
4. வறுமை 5. மிகுதி

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. ஒருவன் விரும்பிய அனைத்தையும் கொடுப்பது எது?
   ஒருவன் செய்யும் வினையின் சுத்தம் அவன் விரும்பிய அனைத்தையும் கொடுக்கும்.

2. ஒருவன் விட்டொழிக்க வேண்டிய செயல்கள் யாவை?
   புகழையும் அறத்தையும் தராத தூய்மையற்ற செயல்களை ஒருவன் எக்காலத்திலும் செய்யாமல் விட்டொழிக்க வேண்டும்.

3. ‘‘இடுக்கண் படினும் இளிவந்த’’ – குறள் விளக்கம் தருக.
   அசைவற்ற தெளிந்த அறிவினையுடையவர், தாம் துன்பப்பட நேர்ந்தாலும், இழிவானச் செயல்களைச் செய்யமாட்டார்.

4. ‘‘ஈன்றாள் பசிகாண்பான்’’ எனத் தொடங்கும் குறளின் பொருளை எழுதுக.
   பெற்ற தாயின் பசியைக் கண்டு வருந்த நேர்ந்தாலும், சான்றோர் பழிப்பதற்குக் காரணமான இழிவான செயல்களைச் செய்யக் கூடாது.

5. நிறைவேறினாலும் துன்பத்தை அளிப்பது எது?
   தகாதவை என விலக்கப்பட்ட செயல்களை விலக்கிவிடாமல் மேற்கொண்டு செய்தவர்க்கு, அச்செயல்கள் நிறைவேறினாலும் துன்பத்தையே கொடுக்கும்.

## 38. உலகப்பொதுமறை

**பக்கம் 157**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. திருக்குறள் 2. மூன்று 3. 38
4. பத்து 5. உருசிய

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. திருக்குறள் உலகப்பொதுமறை எனப் போற்றப்படுவது ஏன்?
   எல்லா நாட்டார்க்கும், எல்லா மொழியார்க்கும், எல்லாச் சமயத்தார்க்கும் உரிய நூலாய், எக்காலத்தார்க்கும் ஏற்ற

பெருநூலாய் விளங்குவதால் திருக்குறள் “உலகப்பொதுமறை” எனப் போற்றப்படுகிறது.

2. குறளைப் பெருமைப்படுத்தி ஔவையார் கூறுவன யாவை?
“அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டிக் குறுகத்தறித்த குறள்” என திருக்குறளைப் பெருமைப்படுத்தி ஔவையார் பாராட்டியுள்ளார்.

3. திருக்குறளின் பெருமைகளை கூறும் பழமொழிகளை எழுதுக.
“நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி” “பழகுத்தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்” என்னும் பழமொழிகள் திருக்குறளின் பெருமைகளை கூறுகின்றன.

4. திருக்குறளை ஏன் கற்க வேண்டும்?
பல நூல்களைப் படித்து ஒருவன் பெறவேண்டிய அனைத்துக் கருத்துவளமும் திருக்குறள் ஒன்றை மட்டும் கற்பதன் மூலம் பெற்று சிறந்த புலவனாய் விளங்க முடியும். எனவே, ஒவ்வொருவரும் திருக்குறளை வாழ்நாள் முழுவதும் விரும்பிக் கற்கும் நூலாய்க் கொள்ள வேண்டும்.

5. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?
தெய்வப்புலவர், திருவள்ளுவ நாயனார், தேவர், செந்நாப் புலவர், பெருநாவலர், முதற்பாவலர், மாதானுபங்கி, நான்முகனார் போன்றவை திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் ஆகும்.

## 39. வேற்றுமை

**பக்கங்கள் 162-163**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வேற்றுமை
2. எழுவாய்
3. மூன்றாம் வேற்றுமை
4. தகுதி
5. உடைய

**ஆ) பொருத்துக.**

1. இரண்டாம் வேற்றுமை
2. ஐந்தாம் வேற்றுமை
3. நான்காம் வேற்றுமை
4. ஏழாம் வேற்றுமை
5. எட்டாம் வேற்றுமை

**இ) வினாக்களுக்கு விடையளி.**

1. வேற்றுமை என்றால் என்ன?
பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை எனப்படும்.

2. வேற்றுமை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

வேற்றுமை எட்டு வகைப்படும். அவை,

- முதலாம் வேற்றுமை அல்லது எழுவாய் வேற்றுமை
- இரண்டாம் வேற்றுமை அல்லது செயப்படுபொருள் வேற்றுமை
- மூன்றாம் வேற்றுமை அல்லது கருத்து வேற்றுமை
- நான்காம் வேற்றுமை அல்லது கொடை வேற்றுமை
- ஐந்தாம் வேற்றுமை அல்லது நீங்கல் வேற்றுமை
- ஆறாம் வேற்றுமை அல்லது உடைமை வேற்றுமை
- ஏழாம் வேற்றுமை அல்லது இட வேற்றுமை
- எட்டாம் வேற்றுமை அல்லது விளி வேற்றுமை

3. கருவி வேற்றுமையை சான்றுடன் விளக்குக.

ஒரு பெயர்ச்சொல்லின் பொருளை கருவி, கருத்தா மற்றும் உடனிகழ்ச்சியாக வேறுபடுத்திக் காட்டுவது மூன்றாம் வேற்றுமை எனப்படும். ஆல், ஆன், ஒடு, ஓடு என்பன மூன்றாம் வேற்றுமைக்குரிய உருபுகள் ஆகும். இதில் ஆல், ஆன் என்ற உருபுகள் கருவி, கருத்தா ஆகிய இரண்டு வகையான பொருளில் வரும்.

எ.கா. வாளால் மரத்தை வெட்டினான்.

மேற்கண்ட தொடரில் ‘வாள்’ என்பது மரத்தை வெட்டும் தொழிலுக்குப் பயன்படுத்திய கருவியைக் குறிக்கிறது.

4. நான்காம் வேற்றுமைக்குரிய பொருள்கள் யாவை?

- கொடை
- அதுவாதல்
- பகை
- பொருட்டு
- நட்பு
- முறை
- தகுதி

5. ஐந்தாம் வேற்றுமையை விவரி.

ஒரு பொருள் எத்தகைய தன்மையை உடையது என்ற பொருண்மையை குறிப்பது ஐந்தாம் வேற்றுமை எனப்படும். ‘இல்’, ‘இன்’ என்பன ஐந்தாம் வேற்றுமைக்குரிய உருபுகள் ஆகும்.

எ.கா. கொடையில் சிறந்தவர் பாரி.

தமிழகத்தின் தெற்கு குமரி.

மேற்கண்ட தொடர்களில் வரும் ‘கொடை’, ‘தமிழகம்’ என்னும் பெயர்ச்சொற்கள் ‘இல்’, ‘இன்’ என்ற வேற்றுமை உருபுகளை ஏற்றுப் பொருள் வேறுபாட்டை உணர்த்துகின்றன. ஐந்தாம் வேற்றுமையானது நீங்கல், ஒப்பு, எல்லை, ஏதுப் பொருளாக வரும்.

6. தற்கிழமை, பிறிதின் கிழமையை விளக்குக.

**தற்கிழமை:** தன்னோடு ஒற்றுமை உடைய, தொடர்புடைய, பிரிக்க முடியாத பொருளை வேறுபடுத்திக் காட்டுவது தற்கிழமை ஆகும்.

எ.கா. வளவனுடைய கை.

மேற்கண்ட தொடரில் ‘கை’ என்பது தனியே பிரிக்க முடியாததாய் வளவனோடு ஒன்றுபட்டு நிற்பதால் தற்கிழமை ஆகும். இது உறுப்பு, பண்பு, தொழில், ஒன்றன் கூட்டம், பலவின் கூட்டம், திரிபின் ஆக்கம் முதலியவற்றில் வரும்.

**பிறிதின் கிழமை:** தன்னோடு ஒற்றுமை அல்லாத, தன்னினும் வேறான மற்றொரு பொருளை வேறுபடுத்துவது பிறிதின் கிழமை ஆகும்.

எ.கா. இராமனது கரிக்கோல்.

மேற்கண்ட எடுத்துக்காட்டில், கரிக்கோல் இராமனை விட்டு வேறுபட்டு நிற்கிறது. இது பொருள், இடம், காலம் போன்ற வகைகளில் வரும்.

7. ஏழாம் வேற்றுமை என்பது யாது?

ஒரு தொழில் அல்லது வினை நிகழும் இடத்தைக் குறிப்பது ஏழாம் வேற்றுமை எனப்படும். சில இடங்களில் இடத்தையும் காலத்தையும் குறிப்பிடும். இதற்கு இட வேற்றுமை என்ற பெயரும் உண்டு. ‘இல்’, ‘உள்’, ‘இடம்’, ‘முன்’, ‘பின்’, ‘கண்’, ‘பால்’, ‘கீழ்’, ‘மேல்’ என்பன ஏழாம் வேற்றுமைக்குரிய உருபுகளாகும்.

எ.கா. பரதன் கபிலனைக் கடையில் பார்த்தான்.

மேற்கண்ட தொடரில் ‘கடையில்’ என்னும் சொல்லிலுள்ள ‘இல்’ என்னும் உருபானது, செயல் நடக்கக்கூடிய இடமான கடையை குறிக்கிறது.

8. விளிவேற்றுமையை விளக்குக.

படர்க்கைப் பெயரை முன்னிலைப் பெயராக மாற்றி அழைப்பது எட்டாம் வேற்றுமை எனப்படும். எட்டாம் வேற்றுமையில் பெயர்ச்சொல்லானது அழைத்தல் பொருளில் வரும். எனவே, இதற்கு விளி வேற்றுமை என்ற பெயரும் உண்டு. இதற்கு உருபு இல்லை. பெயர்கள் திரிந்து வரும்.

எ.கா. மன்னா! வருக!

மேற்கண்ட எடுத்துக்காட்டில் ‘மன்னன்’ என்னும் பெயர்ச்சொல்லானது விளி ஏற்கும்போது ஈற்றெழுத்துக்கெட்டு, அயல் எழுத்து நீண்டு, “மன்னா!” என்றானது.

## 40. ஆறு தூங்குகிறதா?

**பக்கங்கள் 168-169**

**அ) பிரித்து எழுதுக.**

1. நெடுமை + நேரம் 2. அருள் + ஆசி 3. உறக்கத்தில் + இருந்த
4. ஐந்து + ஆறு 5. மரம் + கட்டை

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. குரு எங்கு செல்ல வேண்டுமென கூறினார்?
   குரு மக்களை தேடிச்சென்று ஆசிர்வதிப்பதற்காக வெளியூருக்கு செல்ல வேண்டுமென கூறினார்.

2. ஆறு தூங்குகிறதா என்பதை அறிய என்ன செய்தனர்?
   ஆறு தூங்குகிறதா என்பதை அறிய கொள்ளிக் கட்டையை ஆற்றினுள் வைத்தனர்.

3. ஆற்றினுள் கொள்ளிக் கட்டையை விட்டது யார்?
   ஆற்றினுள் கொள்ளிக் கட்டையை விட்டது மட்டி.

## 41. புறநானூறு

**பக்கம் 173**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. யாருக்கு உதவ வேண்டும்?
   ஆசிரியருக்குத் துன்பம் நேரும்போது உதவ வேண்டும்.

2. கல்வியின் சிறப்பாக புறநானூறு கூறுவதை எழுதுக.
   தன் வயிற்றில் பிறந்த உடன்பிறப்புக் கொண்ட பலரில் சிறப்புப் பெற்றிருப்பவனிடம் தாயின் மனமும் திரிந்து செல்லும். ஒரே குடியில் பிறந்த பலரில் மூத்தவனை வருக என அழைக்காமல் அவர்களில் அறிவுடையவன் வழியில் அரசாட்சியும் நடைபெறும். பிறப்பால் நான்கு பிரிவுகள் உண்டு. அவற்றில் கீழ்க்குலத்தில் பிறந்த ஒருவன் கற்றிருந்தால் மேல்குலத்தில் பிறந்தவனும் அவனிடம் அடக்கமாவான். அதனால் இத்தகைய பெருமையுடைய கல்வியை அனைவரும் பெறவேண்டும்.

3. புறநானூறு – நூல் குறிப்பு வரைக.
   புறநானூறு = புறம் + நான்கு + நூறு. புறநானூறு நானூறு பாடல்களைக் கொண்ட சங்கத் தமிழ் நூலாகும். இது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. புறத்திணை சார்ந்த நானூறு

பாடல்கள் இந்நூலில் அடங்கியுள்ளன. இப்பாடல்கள் பல்வேறு புலவர்களால் பல்வேறு காலங்களில் பாடப்பட்டவை. புறநானூற்றின் பாடல்கள் சங்க கால அரசர்களைப் பற்றியும், மக்களின் சமூக வாழ்க்கை பற்றியும் தெளிவாக எடுத்துரைக்கின்றன.

## 42. திருக்குறள்

**பக்கம் 176**

**அ) வினாக்களுக்கு விடையளி.**

1. யார் சொல் குற்றப்படமாட்டார்கள்?
   சொற்களின் வகைகளை அறிந்த தூய்மை உடையவர், கற்றவர் அவை, கல்லாதவர் அவை என வகையறிந்து பேசும்போது பயத்தால் சொல் குற்றப்படமாட்டார்கள்.

2. நன்கு கற்றவராக மதித்துச் சொல்லப்படுவார் யார்?
   கற்றவர் அவையில் தாம் கற்றவற்றை எல்லாம் பயப்படாமல் அவருடைய மனதில் பதியுமாறு சொல்ல வல்லவர், கற்றவர் எல்லாரிலும் நன்கு கற்றவராக மதித்துச் சொல்லப்படுவார்.

3. “பகையகத்துச் சாவார் எளியர்” என்ற குறளின் பொருளை எழுதுக.
   பகைவர் உள்ள போர்க்களத்தில் அஞ்சாமல் சென்று சாகத் துணிந்தவர் உலகில் பலர். கற்றவரின் அவைக்களத்தில் பேச வல்லவர் சிலரே ஆவார்.

4. “கற்றார்முன் கற்ற செலச்சொல்லி” எனத் தொடங்கும் குறளின் விளக்கம் தருக.
   கற்றவர் அவையில் தாம் கற்றவைகளை அவருடைய மனதில் பதியுமாறு சொல்லி, மிகுதியாகக் கற்றவரிடம் அம்மிகுதியான கல்வியை அறிந்து கொள்ள வேண்டும்.

5. உலகிற்கு பயன் இல்லாதவர் யார்?
   நல்ல அறிஞரின் அவையில் நல்லப் பொருளைக் கேட்பவர் மனதில் பதியுமாறு சொல்ல முடியாதவர், பல நூல்களைக் கற்றாலும் உலகிற்கு பயன் இல்லாதவர் ஆவார்.

## 43. நம்பிக்கை நட்சத்திரங்கள்

**பக்கம் 180**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. கோழிக்கோடு   2. ஓ.எம். நம்பியார்

3. பையோலி எக்ஸ்பிரஸ்   4. 1973   5. 2008

**ஆ) கீழ்வரும் சொற்களை சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. **சாதனை** : சச்சின் கிரிக்கெட் போட்டிகளில் பல சாதனைகளைப் படைத்துள்ளார்.
2. **கனவு** : விடாமுயற்சியுடன் தொடர்ந்து உழைத்தால் கனவு நனவாகும்.
3. **நம்பிக்கை** : பி.டி. உஷா ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக வலம் வருகிறார்.
4. **ஊக்கப்படுத்த** : நம்மால் இயன்றவரை அனைவரையும் ஊக்கப்படுத்த வேண்டும்.

**இ) பொருத்துக.**

1. ஓ.எம். நம்பியார்
2. பி.டி. உஷா
3. பயிற்சிப் பள்ளி
4. பத்மஸ்ரீ விருது
5. சச்சின் பிறந்தநாள்

**ஈ) சிறுவினாக்களுக்கு விடையளி.**

1. பி.டி. உஷா எங்கு பிறந்தார்?

   பி.டி. உஷா கேரளாவிலுள்ள கோழிக்கோடு எனும் மாவட்டத்தில் உள்ள பையோலி எனும் கிராமத்தில் பிறந்தார்.

2. 1979ல் பி.டி. உஷா செய்த சாதனை என்ன?

   1979ல் நடைபெற்ற தேசிய பள்ளி விளையாட்டுப் போட்டியில் கலந்துக் கொண்ட பி.டி. உஷா 100 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் தேசிய சாதனை படைத்து தங்கம் வென்றார்.

3. சச்சின் பயின்ற பள்ளியின் பெயர் என்ன?

   சச்சின் பயின்ற பள்ளியின் பெயர் சாரதாஷ்ரம் வித்யாமந்திர்.

**உ) பெருவினாக்களுக்கு விடையளி.**

1. இந்தியாவின் தங்கத் தாரகை யார்? ஏன் அப்படி அழைக்கப்பட்டார்?

   இந்தியாவின் தங்கத் தாரகை பி.டி. உஷா. 1980ல் மாஸ்கோ ஒலிம்பிக்ஸ் போட்டியில் தேசிய சாதனை, 1982ல் டெல்லி ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தொடங்கி அடுத்தடுத்த சர்வதேச போட்டிகளில் 102 பதக்கங்களை வென்றதால் இந்தியாவின் தங்கத்தாரகை என அழைக்கப்பட்டார்.

2. டெண்டுல்கரின் சாதனைகளில் மூன்றினைப் பட்டியலிடுக.

   - வரையறுக்கப்பட்ட ஓவர் அனைத்துலகப் போட்டிகளிலும் அதிக பட்சமாக இரட்டைச்சதம் எடுத்தவர் டெண்டுல்கர்.
   - ஒரு நாள் போட்டிகளில் 18,426 ஓட்டங்கள் குவித்த வீரராவார்.
   - சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் நூறு சதங்கள் அடித்த

ஒரே வீரர் என்ற மிகப்பெரிய சாதனைக்கும், பெருமைக்கும் சொந்தக்காரர் சச்சின்.

## 44. அணி இலக்கணம்

**பக்கம் 185**

**அ) கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. வேற்றுமை அணி 2. இரண்டு 3. மடக்கு அணி
4. தன்மை நவிற்சி அணி 5. உயர்வு நவிற்சி

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. வேற்றுமை அணியை விளக்குக.

ஒரு செய்யுளில் இரண்டு பொருள்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையை முதலில் கூறிவிட்டு, பின்னர் அவற்றுள் ஒன்றை வேறுபடுத்திக் காட்டுவது வேற்றுமை அணி எனப்படும்.

எ.கா. தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

**குறளின் பொருள்:** தீயினால் சுட்ட புண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனால், நாவினால் கூறிய தீய சொற்களால் நெஞ்சை சுட்ட வடுவானது என்றும் ஆறாது.

**அணிப் பொருத்தம்:** இக்குறளில் தீயும் சுடும், நாவினால் கூறப்படும் தீய சொற்களும் சுடும் என்று இரண்டிற்கும் இடையேயுள்ள ஒற்றுமை கூறப்பட்டுள்ளது. பின்னர் தீயினால் சுட்ட புண் ஆறிவிடும். ஆனால், ஒருவர் பேசிய கொடுஞ்சொற்களால் மனத்தில் ஏற்பட்ட வடுவானது ஆறாமல் நிலைத்து நிற்கும் என்று இரண்டுக்கும் இடையேயுள்ள வேறுபாடு கூறப்படுகிறது.

2. இரட்டுற மொழிதல் அணி என்றால் என்ன?

ஒரு சொல் அல்லது சொற்றொடர் இருபொருள் தருமாறு அமைவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும். இதற்கு சிலேடையணி என்ற பெயரும் உண்டு.

3. செம்மொழிச் சிலேடை அணியை விளக்குக.

ஒரு சொற்றொடரில் உள்ள சொற்கள் பிரிக்கப்படாமல் அப்படியே நின்று இரண்டு பொருளைத் தருவது செம்மொழிச் சிலேடை எனப்படும்.

எ.கா. ஓடும் இருக்குமதன் உள்வாய் வெளுத்திருக்கும்
நாடும் குலைதனக்கு நாணாது – சேடியே!
தீங்கான தில்லாத் திருமலைரா யன்வரையில்
தேங்காயும் நாயுமெனச் செப்பு.

மேற்கண்ட பாடல் தேங்காய்க்கும், நாய்க்கும் இடையேயான சிலேடை ஆகும்.

**தேங்காய்:** தேங்காயில் ஓடு இருக்கும்; அதன் உள்பகுதியில் வெண்மையான பருப்பு இருக்கும்; அனைவராலும் விரும்பப்படும்; கோணல் இல்லாமல் குலையில் காய்திருக்கும்.

**நாய்:** நாய் விரைவாக ஓடும்; சில சமயம் ஓரிடத்தில் படுத்து இளைப்பாறும்; அதன் வாயின் உள்பகுதி வெண்மையாக இருக்கும்; அதை ஆதரிப்போர் அனைவரையும் விரும்பும்; குரைப்பதற்கு வெட்கப்படாது. இப்பாலில் உள்ள சொற்கள் பிளவு படாமல் அப்படியே நின்று தேங்காய், நாய் ஆகிய இரண்டிற்கும் ஏற்பப் பொருள் தருகிறது.

4. மடக்கு அணி என்பது யாது? எடுத்துக்காட்டு தருக.

ஒரு செய்யுளில் முதலில் வந்த சொல்லோ, சொற்றொடரோ மீண்டும் மடங்கி வந்து வேறு பொருளைத் தருவது மடக்கு அணி எனப்படும்.

எ.கா. கொடியார் கொடியார் மதின்மூன்றும் கொன்ற
படியார் பனைத்தடக்கை நால்வாயக் – கடியார்
உரியார் உரியார் எமையாள ஓதற்
கரியார் கரியார் களம்.

**பொருள்:** கொடியவராகிய முப்புர அசுரரின் கொடிகளை உடைய மூன்று மதில்களையும் அழித்த இயல்பை உடையார்; பருத்த பெரிய கையையும், தொங்கும் வாயையுடைய யானையின் அஞ்சத்தக்க தோலை உடையார்; யாவராலும் புகழ்தற்கு அரியார்; கரிய கழுத்தினை உடையார் என்பதே இப்பாடலின் பொருளாகும்.

**பொருத்தம்:** இப்பாடலில் ‘கொடியார் கொடியார்’, ‘உரியார் உரியார்,’ ‘கரியார் கரியார்’ என்னும் சொற்கள் மீண்டும் மீண்டும் வந்து வெவ்வேறு பொருள்களை உணர்த்துகின்றன. இதுவே மடக்கணி ஆகும்.

5. உயர்வு நவிற்சி அணி என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

புலவர்கள் தங்களின் கற்பனைத் திறத்தால் ஒரு பொருளின் தன்மையை மிகைப்படுத்தி அழகுபட கூறுவது உயர்வு நவிற்சி அணி எனப்படும்.

எ.கா. தேனருவித் திரையெழும்பி வானின்வழி யொழுகும்
செய்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்.

**பொருத்தம்:** திருக்குற்றால மலையின் மீதுள்ள தேனைப் போன்ற இனிமையான சுவையை உடைய அருவிகளின் அலையானது

எழுந்து வானத்தில் வழிந்து ஓடுகின்றது. இதனால் செங்கதிரவனின் குதிரைகளுடைய கால்களும், தேர்ச் சக்கரங்களும் வழுக்கி விழுகின்றன. இவ்வாறு கவிஞர் குற்றால மலையின் சிறப்புகளை தமது கற்பனைத் திறன் மூலமாக உயர்த்திப் பாடியுள்ளார். இதுவே உயர்வு நவிற்சி அணி ஆகும்.

## 45. புத்தியைத் தீட்டு

**பக்கங்கள் 187-188**

**அ) பிரித்து எழுதுக.**

1. பனம் + காடு
2. அடி + பகுதி
3. திடீர் + என்று
4. இன்று + இரவு
5. மண் + எண்ணெய்

**ஆ) வினாக்களுக்கு விடையளி.**

1. வணிகனின் குணம் யாது?

   வணிகன் கஞ்சக் குணம் கொண்டவன்.

2. பனங்காட்டிற்குச் சென்ற வேலைக்காரனின் திட்டம் யாது?

   பனங்காட்டிற்குச் சென்ற வேலைக்காரன் தான் வெட்ட வேண்டிய பெரிய மரத்தைத் தேர்ந்தெடுத்து, கோடாரியால் அந்தப் பனை மரத்தின் அடிப்பகுதியைப் பாதி அளவு வெட்டி முடித்தான். பிறகு, அந்த மரம் விழக்கூடிய இடத்திற்கு நேராக மாட்டுடன் வண்டியை நிறுத்தினான்.

3. உடைந்துப்போன வண்டியை பார்த்த வேலைக்காரன் என்ன நினைத்தான்?

   உடைந்துப்போன வண்டியைப் பார்த்த வேலைக்காரன் "வண்டிக்குத்தான் வலிமை இல்லாமல் போய்விட்டது" என்று நினைத்தான்.

4. வணிகன் வாழ்ந்த ஊரில் என்ன பஞ்சம் ஏற்பட்டது?

   வணிகன் வாழ்ந்த ஊரில் மண்ணெண்ணெய் பஞ்சம் ஏற்பட்டது.

5. மண்ணெண்ணை பீப்பாய்களைக் கொண்டு வேலைக்காரன் செய்த செயல் யாது?

   நள்ளிரவில் பெரிய பள்ளம் தோண்டிய வேலைக்காரன், ஒவ்வொரு பீப்பாயாக உருட்டிச் சென்று அதிலிருந்த மண்ணெண்ணையைப் பள்ளத்தில் ஊற்றினான்.

# குறிப்புகள்

# குறிப்புகள்